வாராந்த சஞ்சிகை

# சுடர் ஒளி

செப். 30 - ஒக்.06, 2015


பக்கம் 24

விலை 30/-



# இலங்கையைக் கடிக்கும் முதலைகள்






உலகில் மிக அபூர்வமாகத் தென்படும் அரியவகை 'கண்ணாடி மீன்' நியூஸிலாந்தைச் சேர்ந்த மீனவரின் வலையில் சிக்கியது.

இந்த வகை மீனை நியூசிலாந்தின் வடபகுதியைச் சேர்ந்த ப்ரோஸர் என்பவர் தனது மகன்களுடன் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது, கடலில் பளபளப்பான அழகிய உயிரினம் நெளிந்து செல்வதைக் கண்டார். தனது வலையை வீசி அந்த ஆபூர்வ மீனைப்பிடித்தார்.

அதனைச் சோதனையிட்ட கடல் உயிரியல் அதிகாரிகள் பிடிபட்ட அபூர்வ மீன் 'ஸல்பா மகியோர்' என்ற இறால் வகையைச் சேர்ந்தது என்றும் இது மிக அபூர்வமாகவே கடலின் மேற்பரப்பில் தென்படும் எனவும் தெரிவித்தனர்.

முற்றுமுழுதாக கண்ணாடி போன்ற வடிவில் உள்ள இந்த மீனின் உடல் வழியாக ஊடுருவி எதிர்ப்புறத்தில் உள்ள பொருட்களைத் துல்லியமாகப் பார்க்க முடிகின்றது. முதுகெலும்பு இல்லாத இந்த மீனின் இரைப்பையில் உள்ள உணவு மட்டும் பளிச் என்று வெளியே தெரிகின்றது.


# பிரமிக்க வைக்கும் கட்டடங்கள்



தென் கொரியாவில் சுவியோன் என்ற இடத்தில் கட்டப்பட்ட கழிவறை வீடு இது. உலகக் கழிவறை அமைப்பு சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக 4,508 சதுர அடியில் இந்த வீடு கட்டப்பட்டது.



போலந்தில் ஸ்யாம்பார்க் என்ற இடத்திற்குச் சென்றால் தலைகீழ் வீடுகளைப் பார்க்கலாம். இவை நிஜ வீடுகள் அல்ல. அதுபோலவே டிசைன் செய்யப்பட்ட 'மாதிரி' வீடுகள்.



கூம்பு ஒலிபெருக்கி போன்ற வீடு ஒன்று அமெரிக்காவில் உள்ளது. டெக்சாஸ் மாகாணத்தில் ஹ்யூஸ்டன் என்ற இடத்தில் இந்த வீடு உள்ளது. இதன் பெயர் இன்வெர்ஷன் ஹவுஸ்'.



பழைய மரப் பொருட்களைக் கொண்டு ஒரு வீடு கட்டியிருக்கிறார்கள், ரஷ்யாவில். ஆர்ஹாங்ல்ஸ்க் என்ற இடத்தில் இந்த வீடு உள்ளது, இந்த வீட்டின் பெயர் வுட்டன் ஸ்கைஸ்க்ராப்பர்'. ஜப்பானில் கட்டப்படும் மர வீடுகளை மனதில் கொண்டு கட்டப்பட்ட வீடு இது.



'பபுள் ஹவுஸ்' தெரியுமா? ஐரோப்பிய நாடுகளில் இது மிகப் பிரபலம். இப்போது பலரும் இந்த மாதிரியான வீடுகளைக் கட்ட விரும்புகிறார்கள். 1975 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இதை ஹங்கேரி பொறியாளர் ஆண்டி லவாக் என்பவர் வடிவமைத்தார்.





# பாலியல் வன்முறைகள்

- ஆசாத்

அண்மையில் கம்பஹா மாவட்டத்தின் கொட்டதெனியா பகுதியில், தன்து பேர்த்தியாருடன் உறங்கிக்கொண்டிருந்த ஒரு சிறுமி இரவோடிரவாகக் கடத்தப்பட்டு, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்பு, கொலை செய்யப்பட்டு வீசப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான குற்றவாளிகளுக்கு மரண தண்டணை விதிக்கப்பட வேண்டும் எனக் கோரி பல இடங்களிலும் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பாக இப்படியான கொடிய குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது. ஜனாதிபதியும் நாடாளுமன்றம் அனுமதித்தால், தான் மரண தண்டணையை அமுல்படுத்தத் தயார் எனத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சிறுமியின் பாலியல் வன்முறை மற்றும் கொலைக்கு எதிரான தீவிரமான போராட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையிலும் சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக மேலும் சில கைதுகள் இடம்பெற்றுள்ளன.

ஒரு 10 வயதுச் சிறுமி தொடர்ந்து சில காலமாக மூன்று நபர்களால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏற்கனவே புங்குடுதீவு மாணவி வித்தியா பாலியல் வல்லுறவுக்கு உட்டுபடுத்தப்பட்டு கொடிய முறையில் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக நாட்டில் பரந்த போராட்டங்கள் இடம்பெற்றன. தற்சமயம் அது தொடர்பான வழக்கு இடம் பெற்று வருகிறது.

காரைநகரில் ஒரு பாடசாலைச் சிறுமி கடற்படைச் சிப்பாய் ஒருவனால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவமும் நெடுங்கேணியில் ஒரு பள்ளி மாணவி ஒரு இராணுவச் சிப்பாயால் கெடுக்கப்பட்ட சம்பவமும் அப்படியே கிடப்பில் போடப்பட்டு விட்டன.

இது தொடர்பாக பிரதிப் பொலிஸ் பேச்சாளர் கருத்து வெளியிடும் போது, இந்த வருடத்தில் மட்டும், 10 சிறுவர் பாலியல் துஷ்பிரயோகக் கொலைகள் இடம்பெற்றதாகவும், சிறுவர் பாலியல் முறைகேடுகள் தொடர்பாக 84 முறைப்பாடுகள் கிடைத்ததாகவும் தெரிவித்துள்ளார்.

பாலியல் உணர்வு என்பது மனித குலத்தின் அடிப்படைத் தேவையாகும். அது கட்டுப்பாட்டுடனும், சமூக ஒழுங்குக்கு உட்பட்டும் பிரயோகிக்கப்படும் போது புனிதமானதாகவே நோக்கப்படுகின்றது. அதற்கான அங்கீகாரம் சட்டத்தாலும், சடங்குகளாலும் சமூக மட்டத்தில் வழங்கப்படும் போது அது குடும்பம் என்ற கட்டமைப்பின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகிறது.

ஆனால் அது முறையற்ற விதத்தில் பிரயோகிக்கப்படும் போது சமூகத்தையே சீரழிக்கும் ஆபத்து உருவாகி விடுகிறது. ஆனால் இந்த முறையற்ற பாலுறவு என்பது பாலியல் வக்கிரமாக உருவாகும் போது மனித குல விழுமியங்களே கேள்விக்குள்ளாக் கப்படுகிறது.

சிறுவர் சிறுமியர் பாலியல் துஷ்பிரயோகம் என்பது பாலியல் தேவையை நிறைவேற்ற மட்டும் மேற்கொள்ளப்படுகிறது என்று சொல்லி விட முடியாது. அதில் இயல்பான பாலியல் வக்கிரம் அகோர வடிவில் வெளிப்படும் போதே இப்படியான வல்லுறவுகளும் இது தொடர்பான கொலைகளும் இடம்பெறுகின்றன.

இன்று இலங்கையில் இது ஒரு நாகரீகமாக மாறி விட்டதோ என அஞ்ச வேண்டியுள்ளது. இப்படியான சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் மற்றவர்கள் முன்பு நடமாட வெட்கப்படும் நிலைமை கூட அற்றுப் போய் விட்டது போலவே தோன்றுகிறது. அவர்களையும் சமூகம் புறக்கணிக்கும் நிலை இருப்பதாகத் தெரியவில்லை.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் ஒரு அரசியல் வாதி தான் நூறு பெண்களுடன் பாலியல் உறவு கொண்டதைக் கொண்டாடும் முகமாக பெருமையுடன் ஒரு உல்லாச விடுதியில் தனது நண்பர்களுக்கு விருந்துபசாரம் நடத்திய செய்தி ஊடகங்களில் வெளிவந்தது. நூறு தடவைகள் சமூகக் குற்றத்தைச் செய்தமைக்காக அவர் வெட்கப்படவில்லை. மாறாகப் பெருமைப்பட்டுக் கொண்டார். சட்டமும் அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

இப்படியாகப் பாலியல் குற்றங்கள் ஒரு பெருமைக்குரிய சமூக நாகரீகமாகப் பார்க்கப்படும் நிலையில், பாலியல் வல்லுறவுகளையும் அவை தொடர்பான கொலைகளையும் தடுக்க முடியுமா?

காரைநகரில் ஒரு பாடசாலைச் சிறுமி கடற்படைச்சிப்பாய் ஒருவனால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டாள். முதலில் கடற்படையினர் விசாரணைக்கென பொலிஸரிடம் ஒப்படைக்க மறுத்தனர். பின்பு அடையாள அணி வகுப்பின் போது அவனை விடுமுறையில் வீட்டுக்கு அனுப்பி விட்டு வேறு நபர்களை நிறுத்தி சிறுமியைக் குழப்ப முயன்றனர். இதே போல் நெடுங்கேணியில் ஒரு சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய சிப்பாய்க்கு என்ன நடந்தது என்று இது வரையும் தகவல் வெளிவரவில்லை. பாலியல் குற்றங்களை இழைக்கும் படையினரை அதிகார பீடங்கள் தண்டனையிலிருந்து காப்பாற்ற முயற்சிகளை மேற்கொண்டமைக்கு இவை சில சான்றுகளாகும்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் படையினர் மேற்கொண்ட பாலியல் குற்றங்கள் தனிநபர்களால் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்களாக இல்லாமல் ஒரு போர் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டதெனத் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்க்காலத்திலும், அதன் பின்பும் அதிகார பீடங்களால்

( 22 ஆம் பக்கம் பார்க்க)

**சிறுவர் சிறுமியர் பாலியல் துஷ்பிரயோகம் என்பது பாலியல் தேவையை நிறைவேற்ற மட்டும் மேற்கொள்ளப்படுகிறது என்று சொல்லி விட முடியாது. அதில் இயல்பான பாலியல் வக்கிரம் அகோர வடிவில் வெளிப்படும் போதே இப்படியான வல்லுறவுகளும் இது தொடர்பான கொலைகளும் இடம்பெறுகின்றன.**



# கிரீடத்தை இழக்கும் கிரீஸ் 06

**ஜி.எஸ்.எஸ்.**



கிரீஸ். தத்துவ அறிஞர் அரிஸ்டோடிலையும் தனது மண்ணின் மைந்தன் என்கிறது.

மாஸிடோனியா என்ற நாடு பாரசீகத்தைத் தாண்டி இருந்தது. (பாரசீகம் என்பது தற்போதைய ஈரான்). அதன் மன்னர் இரண்டாம் பிலிப். அவருக்கு சிறுவயதி லிருந்தே ஒரு பெரிய ஆசை உண்டு. தன் நாட்டின் எல்லை களைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் அவருக்கு.

அண்டை நாடுகளுக்கு விஜயம் செய்து அவற்றின் சில பகுதிகளை வசப்படுத்திக் கொண்டார். எபிரஸ் என்ற அண்டை நாட்டின் (அந்த நாட்டின் தற்போதைய பெயர் அல்பேனியா) இளவரசி ஒலிம் பியாஸ் என்பவளைத் திருமணம் செய்து கொண்டார். மன்னர் பிலிப்புக்கும் ஒலிம்பியாஸுக்கும் பிறந்தவர்தான் அலெக்ஸாண்டர்.

ஒலிம்பியாஸ் சிகப்பான உடல் கொண்டவள். அவள் இளவரசிதான் என்றாலும் அவளது தந்தையின் பரம்பரை பலவிதமான காட்டுமிராண்டித்தனமான பழக்கங்களைக் கொண்டது. பாம்புகளோடு விளையாடுவது ஒலிம்பியாஸுக்குப் பிடிக்கும். தூங்கும்போது கூட அவள் பக்கத்தில் பாம்புகளைப் படுத்துக் கொள்ள அனுமதிப்பாள். இப்படி ஒலிம்பியாஸைப் பற்றிப் பலவித செய்திகள் பரவியிருக்கின்றன.

புலிக்குப் பிறந்தது பூனையா குமா என்பது போல் பிலிப்பின் மகன் அலெக்ஸாண்டரும் போர்த் தந்திரங்களில் சிறந்து விளங் கினான். ஆனால் மருத்துவம், தத்துவம் ஆகியவற்றில் கூட அவன் சிறந்து விளங்கியதற்குக் காரணம் உண்டு.

கிரீஸில் அரிஸ்டோட்டில் என்ற சிறந்த தத்துவ ஞானியிடம் பலவித பயிற்சிகளைப் பெற்றதால்தான் பல கலைகளில் வல்லவனாக அலெக்சாண்டர் திகழ்ந்தான். பெல்லா நகருக்கு வந்து தன் மகனுக்குப் பாடங்களை கற்றுத் தரவேண்டுமென்று அரிஸ்டோட்டிலிடம் ஏற்பாடுசெய்து கொண்டார் மன்னர் பிலிப்.

அரிஸ்டோட்டிலும் மன்னர் பிலிப்பும் இளம் வயது நண்பர்கள். அரிஸ்டோட்டிலின் தந்தை ஒரு மருத்துவர். பிலிப்பின் அப்பாவுக்கு மருத்துவம் பார்த்தவர்.

தனது பன்னிரண்டாவது வயதிலேயே அலெக்ஸாண் டர் குதிரை ஏற்றத்தில் மிகச் சிறந்து விளங்கினான். அப்போதுதான் அவனுக்குச் சவாலாக வந்தது புஸிபேலஸ் என்ற பெயர் கொண்ட குதிரை.

கறுப்பு உடல், ஒரு கண் புருவத்துக்கு மேல் வெள்ளை நட்சத்திரக்குறி, பெருத்த தலை இப்படிக் காட்சி அளித்தது அந்த பலம் பொருந்திய குதிரை. குதிரை வணிகர் ஒருவர் அதை மன்னன் இரண்டாம் பிலிப்புக்கு விற்பதற்காகக் கொண்டு வந்தார். தன் குதிரைப் பிரிவுத் தளபதியை அழைத்து அந்தக் குதிரையை சோதிக்கச் சொன்னார் மன்னர்.

குதிரையின் பற்களை ஆராய்வதிலிருந்து, அதன் மீது ஏறி ஒரு சுற்று வலம் வருவது வரை பலவித சோதனைகளை முதலில் அந்தத் தளபதி செய்து பார்க்க வேண்டும். அவனுக்கு திருப்தி அளித்தால் மன்னர் குதிரைக்கான தொகை என்ன என்பதைத் தீர்மானிப்பார். அதற்கு வணிகன் ஒத்துக் கொண்டால் மன்னர் அந்தக் குதிரையில் ஏறி சவாரி செய்து பார்ப்பார். அதில் திருப்தி அடைந்ததால் அந்தக் குதிரையை வாங்கிக் கொள்வார். இதுதான் மரபு.

பின்னொரு காலத்தில் அந்த குதிரை சரித்திரத்தில் இடம் பெறப் போகிறது என்பதை அப்போது யாரும் அறிந்திருக்கவில்லை.

மன்னர் இரண்டாம் பிலிப் தனது இராணுவத் தளபதியை அந்தக் குதிரையின் மீது ஏறி ஒரு வலம் வரச் சொன்னார். ஆனால் தன்னைக் கையாள அந்தக் குதிரை அனுமதிக்கவில்லை. அதன் வாயைத் திறந்து பார்க்க தளபதி முயற்சித்தபோது முரண்டு பிடித்தது. பின்னர் அந்தத் தளபதி தன்மீது ஏற முயற்சித்தபோது அது தன் இரண்டு முன்னங் கால்களையும் உயரே தூக்கி அவனைக் கீழே விசிறிப் போட்டது. தளபதிக்கு இதனால் பெரும் காயம் ஏற்பட்டது.

அந்தக் குதிரையை வாங்க மன்னர் மறுத்தார். வணிகர் சோகத்துடன் அந்த இடத்திலிருந்து தன் குதிரையுடன் நகர முயற்சித்தார். அப்போது மன்னர் பிலிப்பின் அங்கியைப் பிடித்து இழுத்தது ஓர் இளம் கை. அது மன்னரின் மகன் அலெக்ஸாண்டரின் கை.

பதிமூன்று வயது அலெக்ஸாண் டருக்கு அந்தக் குதிரை மிகவும் பிடித்து விட்டது. அந்தக் குதிரையை சரி செய்ய எனக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள்" என்றான் அலெக்ஸாண்டர். முதலில் தயங்கினாலும், பிறகு ஒப்புக் கொண்டார் மன்னர் பிலிப்.

அந்தக் குதிரைக்கு அருகே சென்றான் அலெக்ஸாண்டர். பின்பு அதைப் பார்த்த படியே ஒரு வலம் வந்தான். அந்தக் குதிரை யைத் தட்டிக் கொடுத்தான். அதன்மீது ஏறுவதற்கு அவன் முயற்சி செய்யவே இல்லை. பிறகு மெல்ல மெல்ல அந்தக் குதிரையை சூரியனை நோக்கித் திருப்பினான். குதிரை அமைதி அடைந்தது. ஏனென்றால் இதுவரை அந்தக் குதிரை தன் நிழலைப் பார்த்து தானே பயந்து கொண்டிருந்தது. இப்போது சூரியனைக் காணும் நிலை வந்ததும், அதன் நிழல் அதற்குத் தென்படவில்லை. பிறகு அலெக்ஸாண்டர் அந்தக் குதிரையில் ஏறி மைதானத்தை பல சுற்றுகள் வலம் வந்தான். பார்த்தவர்கள் அனைவருமே கை தட்டிப் பாராட்டினார்கள்.

தந்தைக்கு இதில் மிகப் பெருமை உண்டானது. மகனைக் கட்டிக் கொண்டார். மகனே, உனக்கேற்ற பெரும் சாம்ராஜ்யங் களை நீ உருவாக்கிக் கொள். மாஸிடோனியா என்பது உனக்கு மிகச் சிறிய எல்லைப் பகுதி" என்றார்.

பதிமூன்று வயது அலெக்ஸாண்டர் புத்திசாலியாக இருந்ததோடு ஆணவம் பிடித்தவனாகவும் இருக்க, அவனை நல்வழிக்குக் கொண்டுவரும் பொறுப்பும் அரிஸ்டோட்டிலிடம் ஒப்படைக்கப்பட்டது.

மன்னர் பிலிப் மாபெரும் சைனியத்துடன் அண்டை நாடான திரேஸை ஆக்கிரமித்தார். அப்படிச் செல்லும்போது பதினாறே வயது நிரம்பிய அலெக்ஸாண்டரை மாஸிடோனியாவின் ஆட்சியில் அமர்த்திச் சென்றார். மன்னர் பிலிப் நினைத்த அளவுக்கு எளிதாக திரேஸை கைப்பற்ற முடியவில்லை. அங்கிருக்கும் பழங்குடி மக்கள் பலமாக எதிர்த்தனர்.

(வளரும்)



**அலெக்சாண்டருக்கு பாடம் கற்பிக்கும் அரிஸ்டாட்டில். பிரபல ஓவியர் ஜீன் லியோன் வரைந்த படம்.**

# இணையமும் குழந்தைகளும்



இணையத்தில் குழந்தைகள் தங்கள் நேரத்தை எந்த விதத்தில் செலவிடுகின்றனர் என்பதை பெற்றோர் கண்காணிப்பது மிகவும் முக்கியமாகும்.

கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்கு போன்ற விஷயங்களைப்பற்றி குழந்தைகள் அறிந்துகொள்ள இணையத்தளங்கள் உதவினாலும் தவறான வழிகளில் செல்லவும் இது உதவுகிறது.

குழந்தைகள் இணையத்தை சரியான முறையில் உபயோகிக்க பெற்றோர் கவனத்தில் கொள்ள வேண்டியவை :

பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் நடவடிக்கைகளைப் பற்றி கேட்டுக்கொள்வதே இல்லை. இதனால் குழந்தைகள் வழி தவறும்போது பெற்றோருக்குத் தெரியாமலே போகிறது.

குழந்தைகள் மனதில் எழும் சந்தேகங்களையும் குழப்பங்களையும் தீர்க்கவும், குழந்தைகளின் விருப்பங்களை அறியவும் அவர்களுடன் அதிக நேரம் செலவிட வேண்டும். அவர்களை சரியான பாதையில் அழைத்துச் செல்லவும் இது உதவும்.

கம்ப்யூட்டரை குழந்தைகளின் அறையில் வைப்பதை தவிர்ப்பது நல்லது. தனிமையில் இருக்கும்போது தவறானவற்றை பார்க்கலாமே என்ற எண்ணம் தோன்றும். இவ்வளவு நேரம் தான் கம்ப்யூட்டரில் குழந்தைகள் செலவிட வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். அவர்கள் விரும்பும் நேரத்தில் கம்ப்யூட்டரை உபயோகிக்காமல் இருக்க கடவுச் சொல் உதவும்.

குழந்தைகளுக்கு நல்ல முறையில் புரியவைப்பது அவசியம். அதிகமான கண்டிப்பு தவறான பாதைக்கு அவர்களை அழைத்துச் செல்லலாம்.

# பாடசாலைக்குச் செல்லும் பூனை



தனது உரிமையாளரின் குழந்தைகளுடன் பாடசாலைக்கு செல்லும் பூனைக்குப் பள்ளி நிர்வாகம் அடையாள அட்டை வழங்கியுள்ள விநோத சம்பவமொன்று அமெரிக்காவில் நடைபெற்றுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்திலுள்ள சான் ஜோஸ் நகரைச் சேர்ந்த ஆம்பர் மரியந்தால் என்ற பெண், 'பூபா' என்ற பூனையை தத்தெடுத்து வளர்த்தார். அவரது மகன்கள் மேத்யூ, மார்க் ஆகியோர் அந்த பகுதியிலுள்ள லேலேண்ட் உயர்நிலைப்பள்ளியில் படித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் பூபா வீட்டில் இருக்காமல் தினமும் பள்ளிக்கு சென்று வகுப்பறைகளில் அமர்ந்து பாடத்தை கவனிக்கிறது. பள்ளி திறக்கும் முன்பு முதல் ஆளாக அங்கு சென்று வாசலில் காத்துக் கொண்டிருக்கிறது பூபா.

தினமும் பள்ளிக்கு வரும் பூபாவை மாணவர்களுக்கு மிகவும் பிடித்துள்ளது. பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு அடையாள அட்டைக்காக புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

அப்போது பள்ளி வளாகத்தில் சுற்றிக் கொண்டிருந்த பூபாவுக்கே முதலில் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. ஆம்பர் வளர்க்கும் பிற பூனைகள் வீட்டோடு இருக்கையில் பூபா மட்டும் பள்ளிக்கு சென்று மாணவர்களுடன் பழகுவது அப்பகுதி மக்களை வியக்க வைத்துள்ளது.

# தமிழில் புத்தகம் வெளியிட்ட சீனப் பெண்



தமிழில் பேசுவதற்கு எழுதுவதற்கும் தமிழர்களே தயங்கும் இந்த நாட்களில் ஒரு சீனப்பெண் தமிழை முறைப்படி பயின்று தமிழில் புத்தகம் ஒன்றை எழுதி அதை வெளியிட்டுள்ளார். அதுமட்டுமின்றி அவர் தன் பெயரை பெயரான Zhao Jiang என்ற பெயரை கலைமகள் என்றும் மாற்றியுள்ளார்.

15 ஆண்டுகளுக்கு முன்பே இவர் தமிழை படிக்க ஆரம்பித்து தற்போது தமிழில் புத்தகம் எழுதி வெளியிடும் அளவுக்கு தமிழில் தேர்ச்சி பெற்று விளங்குகிறார். அதுமட்டுமல்ல தமிழில் புத்தகம் எழுதிய முதல் சீனப்பெண் என்ற பெருமையையும் இவர் பெறுகிறார்.

தற்போது சீனாவில் இருந்து இயங்கும் ஒரு தமிழ் வானொலியில் தமிழ் அறிவிப்பாளராக வேலை பார்த்து வருகிறார். சீனாவில் உள்ள Communications University of China என்ற பல்கலைக்கழகத்தில் தமிழ் பாடத்தை முதன்மையாக எடுத்து பட்டப்படிப்பு படித்துள்ள இவர், சீனத்தலைநகர் பீஜிங்கில் உள்ள ஒரே தமிழ் பள்ளியில் தமிழாசிரியராக பகுதிநேர ஆசிரியராகவும் வேலை பார்க்கிறாராம்.

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# கடல் வளங்களுக்காக பிறரிடம் கை ஏந்தும் நிலை வேண்டுமா..?

மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டிருப்பது யாழ்ப்பாண மாவட்டம். அதனால் அது குடாநாடு என்று அழைக்கப்படுகிறது. கடல் வளம் பெருகிக் காணப்படும் குடாநாட்டுக்கு 'மீன் ரின்கள்' பெரும் எண்ணிக்கையில் வெளிநாடுகளில் இருந்து 'இறக்குமதி' செய்யப்படுகின்றன.

இதேவேளை - கடல் வளங்களைப் பாதுகாப்பது தொடர்பான அதிகாரம் எதுவும் மாகாண சபைக்கு இல்லை. மத்திய (கொழும்பு) அரசிடமே அதிகாரங்கள் அள்ளிக் குவிக்கப்பட்டுள்ளன.

நாட்டுக்கு நலன் விளைக்க வல்ல அதிகாரங்களை, மத்தியில் (கொழும்பில்) குவித்து வைத்திருந்தால்தான், மாகாண சபைகளைத் தமது காலடியில் கட்டி வைத்திருக்கலாம் என்று கொழும்பு அரசின் முந்தைய பிரதானிகள் கணக்குப் போட்டிருக்க வேண்டும்.

சமஷ்டி ஆட்சியை இந்த நாட்டில் உருவாக்குவதற்கு, எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க விரும்பம் கொண்டிருந்தபோதிலும், அதனைத் தறுக்கணிக்கச் செய்வதில் மும்முரமாகச் செயற்பட்டவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் அப்போதைய ஜாம்பவான்களே!

அதே ஐக்கிய தேசியக்கட்சியே, இப்போதைய ஆட்சியில் தலைமைத்துவத்தையும் தன்னிடம் வரித்துக்கொண்டுள்ளது. மாகாண சபைகள், தத்தமது பிரதேசங்களின் வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கவோ, மேலெடுக்கவோ, சுயமாகச் செயற்படவிடாமல், தமது கைகளில் கடிவாளத்தை வைத்திருக்க வேண்டும் என்ற பாங்கில் செயலாற்றுவது கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இத்தகைய ஒரு நிர்வாகச் சூழமைவில், வடக்கின் கடல் வளங்களை மத்திய அரசே உறிஞ்சிக் குடிப்பதற்குத் திட்டமிட்டாலும் ஆச்சரியப்பட இயலாது!

தமிழகத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் எமது கடல் பிரதேசங்களில் இழுவைப்படகுகள் மூலம் தொழில்செய்து வடக்கின் மீன் வளத்தை தறுக்கணிக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அது மற்றொரு பெரும் "சாபக்கேடாகி" விட்டது!

தமிழக மீனவர்களின் இப்போதைய அத்துமீறலைத் தடுத்து நிறுத்துவது உடனடித் தேவையாக நீண்டு உயர்ந்து உபத்திரவம் தருகிறது. அவர்களது செயற்பாட்டை நிறுத்துவதற்குக் கொழும்பு அரசே விரைந்து செயற்பட வேண்டும். நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாமா?

இதேவேளை - மறுபுறத்தில் கடல் வளங்களைப் பாதுகாப்பது தொடர்பான நடைமுறை மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, ஆறு அம்சங்களை வகுத்து அவை குறித்த - கருத்துக்களை எழுத்துமூலமாக வழங்குமாறு வடக்கின் மீன்பிடித்துறை அமைச்சர் பா. டெனீஸ்வரன் கோரியிருந்தார்.


வடக்கில் இயங்கும் கடற்றொழில் சார் சங்கங்களிடம் கோரியிருந்த போதிலும், ஒரே ஒரு சங்கம் மட்டுமே அதனை வழங்கி இருந்ததாக அமைச்சர் கவலை வெளியிட்டமை இங்கு ஊன்றித் தொட்டுக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் விவகாரத்தை எமது அரசியல்வாதிகள், வாக்கு வங்கியாகப் பயன்படுத்தும் வகையில் செயற்படுவதாகவும் அமைச்சர் கவலையுடன் குற்றஞ்சாட்டி இருப்பதும், இங்கு ஊன்றிப் பதியப்பட வேண்டியதாகும்.

இதே நிலைமை தொடருமாயின், எமது எதிர்காலச் சந்ததியினர் கடல் வளங்களுக்காக பிறரிடம் கை ஏந்தும் நிலைமை உருவாகலாம் என்ற அமைச்சரின் கருத்து, தட்டிக் கழித்து விட முடியாத ஒன்றாகும்.

அத்தகைய, பாதக நிலையைக் கருக் கொள்ளாது தடுப்பது, சமகாலத்தின் தவிர்க்க இயலாத முதன்மைத் தேவை. அதனை சம்பந்தப்பட்ட சகலரும் புரிந்து உள்ளார்ந்த மனதுடன் செயற்பட வேண்டும். எதிர்பார்க்கலாமா, என்ன..?

# புட்டீனின் பொறிக்குள் சிக்கினார் ஒபாமா



அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவிற்கு ரஷ்ய அதிபர் விளடிமீர் புட்டீன் முதலாவது பொறியை உக்ரேனில் வைத்தார். இப்போது சிரியாவில் அடுத்த பொறியை , வைத்துள்ளார். இரண்டிலும் பராக் ஒபாமா ஏதும் செய்ய முடியாதபடி சிக்கலை அமெரிக்கா எதிர் கொள்கின்றதா? 1991 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியடைந்த பின்னர் மேற்கு நாடுகளுக்குச் சாதகமாக இருந்த உலக ஒழுங்கை ரஷ்யா இன்னும் தனக்குச் சாதகமாக்காவிடினும் அது ஒரு குழப்பத்தை உருவாக்கிவிட்டது.

**முதலாவது பொறி**

ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையாமல் ரஷ்யாவின் யூரோ ஏசியன் ஒன்றியத்தில் இணையவிருந்தது உக்ரேன். ஐக்கிய அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பாவும் இணைந்து உக்ரேனில் ரஷ்ய சார்பு உக்ரேன் ஆட்சியாளர் விக்டர்



யனுகோவிசை பதவியில் இருந்து உக்ரேனில் உள்ள புதிய நாஜீக்களின் உதவியுடன் விரட்டி உக்ரேனை ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைக்க முயன்றன. பதிலடியாக உக்ரேனில் வாழும் ரஷ்யர்களை உக்ரேனின் மேற்கு நாட்டு ஆதரவு ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்யச் செய்தார் விளடிமீர் புட்டீன். விளைவாக உக்ரேனில் இருந்து கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கிறிமியாவை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டது. உக்ரேனின் கிழக்குப் பிராந்தியத்தில் பெரும் உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருக்கின்றது. உக்ரேனில் தனது காய் நகர்த்தல்களை வல்லமை மிக்க அமெரிக்க உளவுத் துறைக்கு தெரியாமல் புட்டீன் செய்து முடித்தார். தற்போது உக்ரேன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய முடியாத அளவிற்கு மோசமான பொருளாதார நிலையில் இருக்கின்றது. உக்ரேனை மீட்க முடியாத நிலையில் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் ஐக்கிய அமெரிக்காவும் இருக்கின்றன. சில அமெரிக்க அரசியல் ஆய்வாளர்களும் கொள்கைவகுப்பாளர்களும் முழு உக்ரேனையும் ரஷ்யா ஆக்கிரமித்து தனதாக்கினலும் பெலரஸைத் தன்னுடன் இணைத்தாலும் அது அமெரிக்க நலன்களுக்கோ அல்லது பாதுகாப்பிற்கோ பெரிய இடையூறுகளை ஏற்படுத்தப் போவதில்லை என்கின்றனர். ஆனால் இது ரஷ்யாவின் விரிவாக்கத்தை ஊக்குவிக்கும் என்பது உண்மை அது காலப் போக்கில் ரஷ்யாவை வலுவடையச் செய்து ஐரோப்பாவை மீண்டும் ஒரு பெரிய போர்க்களமாக மாற்றலாம்.

**இரண்டாவது பொறி**

பராக் ஒபாமாவிற்கு விள்டிமீர் புட்டீன் வைத்த இரண்டாவது பொறியாக சிரியா அமைந்துள்ளது. சிரியாவில் உள்நாட்டுப்' போர் தொடங்கியதில் இருந்து பராக் ஒபாமாவின் சிரியா தொடர்பான கொள்கைகளில். இரண்டு முக்கிய அம்சங்கள் இருந்தன. முதலாவது சிரிய . அதிபர் பஷார் அல் அசாத் இரசாயன குண்டுகளைப் பாவித்தால் அது சிவப்புக் கோட்டைத் தாண்டியது போலாகும்.


- வேல்தர்மா

அதற்கு எதிராக ஐக்கிய அமெரிக்கா படை நடவடிக்கை எடுக்கும். இரண்டாவது பஷார் அல் அசாத் பதவியில் இருந்து அகற்றப்பட வேண்டும். போரை முடிவுக்குக் கொண்டுவரும் எந்த ஒரு பேச்சுவார்த்தையிலும் பஷார் அல் அசாத் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார். சிரியாவில் இரசாயனக் குண்டுகள் பாவிக்கப்பட்ட போது ஐக்கிய அமெரிக்கா எந்த ஒரு படை நடவடிக்கையும் எடுக்காதபடி

போல் அமெரிக்க உளவுத் துறைகளுக்குத் தெரியாமல் விமானங்கள் மூலமாகவும் கடற்கப்பல்கள் மூலமாகவும் பெருமளவு படைக்கலன்களையும் கனரக படைக்கல ஊர்திகளையும் துருப்புக் காவிகளையும் சிரியாவில் கொண்டு போய் புட்டின் இறக்கினார். இவையாவும் சிரியப் படைகளுக்கு ஆலோசனை வழங்குவதற்கு அனுப்பப்படும்

எதிராக முன்பு எப்போதும் இல்லாத அளவும் தீவிரமான விமானத் தாக்குதல்களும் உலங்கு வானூர்தித் தாக்குதல்களும் நடத்தப்படுகின்றன.

ரஷ்யா தான் இஸ்லாமியப் போராளிகளுக்கு எதிராகத் தாக்குதல் செய்யப் போவதாகச் சொல்கின்றது. அமெரிக்காவும் துருக்கியும் அதையே செய்யப் போவதாகச் சொல்கின்றன. இதனால் எதிர்பாராத நிகழ்வுகள் ஏற்பட வாய்ப்புண்டு. அதனால் அமெரிக்கப் படைகள் தனது படையினருடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றார் விளடிமீர் புட்டின். ஈராக்கிலும் ஆப்கானிஸ்த் தானிலும் நேட்டோப் படைகள் போர் புரியும் போது ஒரு நாட்டுப் படைகள் தவறுதலாக மற்ற நட்பு நாட்டுப் படையினர் மீது தாக்குதல்



வெளிவரும் 'ஃபைனாச்ஷியல் ரைம்ஸ்'. ரஷ்யா தற்போது சிரியாவை நோக்கிச் செய்துள்ள படை நகர்வு சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்கும் பின்னர் செய்த பெரிய படைநகர்வாகக் கருதப்படுகின்றது. சில கணிப்பீடுகள் 24 ரஷ்யப் போர் விமானங்கள் சிரியாவில் இறக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றன.

சிரியாவில் ஐ எஸ் அமைப்பினரும் ஐபத் அல் நஸ்ரா அமைப்பினரும் சிரிய அரச படைகளுக்கு பெரும் சவாலாக இருக்கின்றார்கள். இவர்களை ரஷ்யா ஒழித்துக் கட்டிவிட்டால் அசாத்தின் ஆட்சியை அசைக்க முடியாத நிலை உருவாகும். இதை சவுதி அரேபியா, காட்டார், குவைத், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய சுனி முஸ்லிம் நாடுகள் விரும்பாது. அமெரிக்கா, சிரிய அதிபர் அசாத்திற்கு எதிராக படை நடவடிக்கை எடுக்காமல் இதுவரை இருந்தது இந்த நாடு களுக்கு கடும் அதிருப்தியைக் கொடுத்துள்ளது. சிரியாவில் அசாத்தின் ஆட்சியை அசைக்க முடியாத ஒரு நிலையை ரஷ்யா ஏற்படுத்த முயல்கின்றது.

அமெரிக்கா ஆதரவு கொடுக் கும் சுதந்திர சிரியப் படையும் அதன் இணை அமைப்பினரும் தீரமாகப் போராட முடியாதவர்

புட்டீன் தடுத்து விட்டார். அமெரிக்கப் படைகள் சிரிய அரச படைகள் மீது தாக்குதல் நடாத்தினால், ரஷ்யப் படைகள் சவுதி அரேபியாவின் எரிபொருள் உற்பத்தி நிலைகள் மீது தாக்குதல் நடாத்துவதாக மிரட்டியதாகச் சொல்லப்பட்டது. அத்துடன் அரசியல் நகர்வாக ரஷ்யா சிரியாவில் உள்ள இரசாயன ஆயுதங்களை அழிக்கும் பொறுப்பைத் தானே ஏற்றுக் கொண்டது. ஒபாமாவின் செங்கோட்டைத் தாண்டிய அசாத்தை, ஒபாமாவால் ஏதும் செய்ய முடியாத நிலையை புட்டீன் உருவாக்கினார்.

அமெரிக்காவும் துருக்கியும் இணைந்து இஸ்லாமியப் பயங்கரவாதிகளை ஒழிப்பது

படைத்துறை நிபுணர்களை அனுப்புதல் என்னும் போர்வையில் செய்யப்பட்டது. எல்லாவற்றிலும் மேலாக விமானத்தில் இருந்து விமானங்களைத் தாக்கும் விமானங்களும், படைக்கலன்களும், தரையில் இருந்து விமானங்களைத் தாக்கக் கூடிய ஏவுகணைகளும், சிரியாவில் ரஷ்யாவால் கொண்டு போய் இறக்கப் பட்டுள்ளன. இது இனி எந்த ஒரு கட்டத்திலும் அமெரிக்கப் படைகள் சிரிய அரச படைகளுக்கு எதிராகத் விமானத் தாக்குதல் செய்ய முடியாத நிலையை உருவாக்கியுள்ளது.

சிரிய அதிபர் பஷார் அல் அசத்தின் இனக்குழுமத்தினர் பெரும்பான்மையாக வாழும்



**சிரியாவில் இரசாயனக் குண்டுகள் பாவிக்கப்பட்ட போது ஐக்கிய அமெரிக்கா எந்த ஒரு படை நடவடிக்கையும் எடுக்காதபடி புட்டீன் தடுத்து விட்டார். அமெரிக்கப் படைகள் சிரிய அரச படைகள் மீது தாக்கு தல் நடாத்தினால் ரஷ்யப் படைகள் சவுதி அரேபியாவின் எரிபொருள் உற்பத்தி நிலைகள் மீது தாக்குதல் நடாத்துவதாக மிரட்டியதாகச் சொல்லப்பட்டது.**

நடாத்திய சம்பவங்கள் பல உண்டு. ஒரே கட்டளைப் பணியகத்தின் கீழ் செயற்பட்ட படைகளின் நடவடிக்கைகளே அப்படி இருக்கும் போது. சிரியாவில் நிலைமை மிக மோசமாக அமையலாம் என அமெரிக்காவும் உணர்ந்து கொண்டது. இதனால் அமெரிக்கப் பாதுகாப்புத் துறைச் செயலர் அஸ்டன் கார்ட்டர் ரஷ்யப் பாதுகாப்புத் துறை அமைச்சர் சேர்கி ஷொய்குவுடன பேச்சு வார்த்தை நடாத்தினார்.

புட்டீனின் நகர்வால் அமெரிக்கா பின்னோக்கி அடி எடுத்து வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்கின்றது இலண்டனில் இருந்து

களாகவே இருக்கின்றனர். அமெரிக்கா ஐநூறு மில்லியன் டொலர்கள் செலவழித்துச் செய்த பயிற்சியும் படைக்கலனும் திட்டம் இதுவரை எதிர்பார்த்த அளவு பயனைக் கொடுக்க வில்லை. சிரியாவின் அரச படைகள் நன்கு பயிற்றப் பட்டவையும் அசாத்திற்கு விசுவாசம் மிக்கவையுமாகும். இதனால் தற்போது சிரியாவில் ரஷ்யாவின் கைகளே ஓங்கியுள்ளன. பஷார் அல் அசாத்தைப் பதவியில் இருந்து அகற்றும் பராக் ஒபாமாவின் இரண்டாவது நோக்கத்திற்கும் புட்டீன் ஆப்பு வைத்து விட்டார்.

இலண்டனில் பிரித்தானிய

(22 ஆம் பக்கம் பார்க்க)

என்ற போர்வையில், சிரியாவில் ஆட்சி மாற்றம் செய்வதற்கான படை நடவடிக்கைக்கு முனைந் தமை ரஷ்ய அதிபர் புட்டீனைப் பதில் நடவடிக்கைக்குத் தூண்டியது. உக்ரேனில் செய்தது

பிராந்தியத்தில் உள்ள லதக்கியா விமானத்தளத்தில் ரஷ்யப் படையினருக்கு என தற்காலிக முகாம்கள் அமைக்கப்படுகின்றன. 2015 செப்டம்பர் 17 ஆம் திகதியில் இருந்து ஐ எஸ் அமைப்பினருக்கு




# பணம் கொட்டும் பேய்

கமல் ஹாசனையே அசர வைத்துவிட்டன தமிழ் சினிமாவைப் பிடித்திருக்கும் பேய்கள்.

எனக்கு ஆவிகள் மீது நம்பிக்கை கிடையாது. ஆனால், தற்போது ஆவி படங்களுக்குத் தான் நல்ல மதிப்பு உள்ளது என்று சமீபத்தில் நடந்த ஒரு திரைப்பட விழாவில் கூறியிருக்கிறார் கமல்.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறையோ எப்போதாவது தமிழில் மொழிபெயர்க்கப்படும் 'ஹொலிவுட்' பேய்கள் தமிழ் ரசிகர்களைத் தவணை முறையில் பயமுறுத்திவந்தன. இப்போது அவை அதிகரித்துவிட்டன.

சில ஆண்டுகளுக்கு முன்பு வெளியான 'ஈரம்', 'யாவரும் நலம்' ஆகிய படங்கள் பேய் படத்தையும் இத்தனை தரமான அனுபவமாக மாற்ற முடியுமா என்று ரசிகர்களை வியக்க வைத்தன. ஆனால் நிஜமான சீசன் களை கட்டத்தொடங்கியது. கார்த்திக் சுப்புராஜ் சமைத்துக் கொடுத்த 'பீட்சா' வழியாகத்தான். இந்தப் படம் ஒவ்வொரு வீட்டிலும் பேய் படங்கள் பற்றி ஆவி பறக்க பேச வைத்தன. 'பீட்சா' மூலம் தொடங்கப்பட்ட இந்த பேய் திருப்புமுனை காஞ்சனா 2இன் பிரம்மாண்ட வெற்றியின் மூலம் இவ்வகைப் படங்களின் உத்திரவாதமான வெற்றியை உறுதிப்படுத்தியது.

'டார்லிங்', 'டிமாண்டி காலனி', 'மாஸ்' என விதவிதமாய் பேய்க் கதாபாத்திரங்களைக் கதாநாயகர்களே துணிச்சலாக ஏற்றது தமிழ்ப் பேய்ப் படங்களுக்கு ஒரு திருப்புமுனை என்றுதான் சொல்லவேண்டும். திரையரங்குக்கு வராமல் ஒதுங்கியிருந்த குழந்தைகளையும் பெண்களையும் கூட இந்தப் போக்கு வரவழைத்துவிட்டது. நாயகர்களுக்கு முன்பே அழகிய நாயகியர் பேய் வேடத்துக்குச் சம்மதித்தாலும் பேயாக நடித்தால் எங்கே தங்கள் முக்கியத்துவம் போய்விடுமோ என்று முன்னணிக் கதாநாயகிகள் பயந்த காலம் தற்போது மலையேறிவிட்டது.

அரண்மனை -2 படத்தில் பேயாக நடிக்க ஒப்புக்கொண்டிருக்கும் த்ரிஷா, 'நாயகி' படத்திலும் பேய் அவதாரம் எடுக்கிறார் என்கிறார்கள். மற்றொரு முன்னணி நாயகியான நயன்தாராவும் 'மாயா' திரைப்படம் மூலம் அழகு மோகினியாகப் பேய் வேடம் ஏற்றிருக்கிறார் என்று தகவல் வருகிறது. நாயகன், நாயகியைத் தாண்டித் தற்போது குணச்சித்திர நடிகர்களும் பேய் வேடங்களில் கலக்க ஆரம்பித்து விட்டார்கள். இதற்கு சமீபத்திய உதாரணம் சத்யராஜ், 'ஜாக்சன் துரை'யாகப் பேய் வேடம் போட்டிருப்பதைச் சொல்ல வேண்டும்.

எத்தனையோ பேய்ப் படங்கள் வந்தாலும் பேய்க் கதைகளில் நகைச்சுவையைக் கலந்து பிரம்மாண்ட வெற்றிகளைப் பெற்றுவருபவர் இயக்குநரும் நடிகருமான லாரன்ஸ்தான். 2007 இல் 'முனி' என்ற பேய்ப் படம் மூலம் இந்த வகைத் திரைப்படங்களுக்கு இன்னும் வரவேற்பு உள்ளது என்பதை நிரூபித்தவர் இவர். 'முனி', 'முனி-2 காஞ்சனா', 'காஞ்சனா-2' எனத் தொடர்ந்து வெற்றிக்கொடிகட்டுகிறார். காஞ்சனா-2வின் செலவு வெறும் 17 கோடி ரூபாய்.

தென்னிந்திய மாநிலங்களில் படம் வசூலித்ததோ 150 கோடி ரூபாய்க்கும் மேல். 'காஞ்சனா- 3' படத்தை 'மொட்ட சிவா கெட்ட சிவா' என்ற பெயரில் இயக்கி பொலிஸ் பேயாக நடிக்க இருக்கிறாராம் லோரன்ஸ். தவிர 'நாகா' என்ற தலைப்பில் நாகராஜாவின் கதையை நான்கு பாகங்கள் கொண்ட பேய்ப் படங்களாக உருவாக்குகிறார் என்றும் தகவல் கிடைக்கிறது.

தமிழில் பேய் படங்கள் எத்தனையோ வந்திருக்கின்றன. நான் பேய்க் கதையில் நகைச்சுவையைச் சேர்த்தேன். அது பெண்களிடமும்



குழந்தைகளிடமும் என்னைக் கொண்டு சேர்த்துவிட்டது என்கிறார் இயக்குநர் மற்றும் நடிகரான லோரன்ஸ்.

வெற்றிகரமான நகைச்சுவைப் படங்களை உருவாக்குவதில் தேர்ந்த சுந்தர்.சி, தனது பேய்ப் படமான 'அரண்மனை'யின் வெற்றியைத் தொடர்ந்து அரண்மனையின் இரண்டாம் பாகத்தை இயக்கி வருகிறார். பேய்களுக்கு அழுத்தமான பின்னணிக் கதைகளை அமைத்துவிடுவது இவரது திரைக்கதைகளின் வெற்றிக்குக் காரணமாக இருக்கிறது என்கிறார் 'பிள்ளை நிலா', 'நைனா' ஆகிய பேய்ப் படங்களை இயக்கிய மூத்த இயக்குநர், நடிகர் மனோபாலா. சுந்தர்.சி பேய்ப் படங்களை இயக்குவதோடு பேய்ப் படங்களில் முதலீடு செய்வதிலும் ஆர்வம் காட்டுகிறார். அறிமுக இயக்குநர் எஸ்.பாஸ்கர் இயக்கும் 'ஹலோ நான் பேய் பேசுகிறேன்' என்ற படத்தையும் தயாரித்துவருகிறார்.

குறைந்த செலவில் நிறைய இலாபம் என்னும் இலக்கில் அக்காலம் முதல் இக்காலம் வரை ஹொலிவுட்டிலும் பேய்களை மையமாக கொண்ட திகில் படங்களே வசூலில் சாதிப்பவையாக உள்ளன.

'ஜுராசிக் வேர்ல்ட்' படம், உலகம் முழுவதும் 1600 மில்லியன் டாலர்களை வசூலித்தது. அதன் தயாரிப்புச் செலவு 300 மில்லியன் டொலர். முதலீட்டை விட 533 சதவீதம் இலாபத்தை வசூலித்தது. ஆனால் அதைவிடக் குறைவான செலவில் எடுக்கப்பட்ட 'பேராநார்மல் அக்டிவிட்டி' என்ற திகில் படம் 236 மில்லியன் டொலர்களை வசூலித்தது. அதன் தயாரிப்புச் செலவோ வெறுமனே 9.4 மில்லியன் டொலர்கள்தான். இலாபத்தின் சதவீதம் 2,510 சதவீதம்.

'பட்ஜெட்' என்னவாக இருந்தாலும் நம்மைத் திகிலூட்டும் பேய்க் கதைகள் மட்டும் தான் வெற்றிபெறுகின்றன என்கிறார் திரைப்பட விமர்சகர் மற்றும் இயக்குநர் கேபிள் சங்கர். பேய்ப் படங்களுக்கு உத்தரவாதம் இருக்கிறது. தியேட்டர்களுக்கு பார்வையாளர்களை ஈர்க்கும் நாயகர்களைப் போல,

(22ஆம் பக்கம் பார்க்க)



- பிரமன்

# இலங்கையைக் கடிக்கும் முதலைகள்



உலகச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாதவகையில் சரிந்துள்ளது. ஆயினும் இலங்கையில் இன்னமும் பழைய விலையிலேயே எரிபொருள் விற்பனை செய்யப்படுகின்றது.

அதேபோல் நல்லாட்சி அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தில் குறைக்கப்பட்ட அத்தியாவசியப் பொருள்களும் முன்னைய விலையை விடவும் அதிகரிக்கத் தொடங்கிவிட்டன. எல்லா நாடுகளிலும் டொலரின் பெறுமதி குறைந்து கொண்டு செல்லும் போது, இலங்கையில் மட்டும் டொலருக்கு எதிராக ரூபாவின் மதிப்பு சரிந்து, கடைசியில் மிதக்க விடப்பட்டுள்ளது. அதெப்படி உலக நடைமுறைக்கு மாறாக இலங்கையில் மட்டும் விலைவாசி உயர்வும், டொலரின் பெறுமதி அதிகரிப்பும் நிகழ்கிறது? எல்லாவற்றுக்கும் காரணம் இருக்கிறது.

அதுதான் ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத்தொடர். இலங்கைக்கு எதிரான வகையில் ஜெனீவாவில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட போகின்றது. சர்வதேச விசாரணை அல்லது அதற்கு ஒப்பான கலப்பு நீதிபதிகள் குழு விசாரணை வரப்போகின்றது என்ற கதைகள் முன்னரேயே அடிபடத் தொடங்கியிருந்தன. இதனால் முதலீட்டாளர்கள் புதிய தொழில் முயற்சிகளில் இறங்கத் தயங்கினர். ஏற்கனவே இருந்த வர்த்தக நடவடிக்கைகள் சரியாமல் காத்தாலே போதும் என்ற தற்காப்பு நிலையை எடுத்தனர். இதனால் இலங்கையின் பங்குச் சந்தை பெரும் சரிவைச் சந்திக்கத் தொடங்கியது.. இந்தச் சரிவு கலப்பு விசாரணை உறுதியென்றவுடன் இன்னும் இலங்கையின் பொருளாதாரத்தை உலுக்கியது. அதனால் தான் நல்லாட்சி அரசாங்கம் அத்தியாவசியப் பொருள்களின் விலையை உள்ளூர் உற்பத்தியாளர்களைச் சாட்டாக வைத்து உயர்த்தத் தொடங்கியுள்ளது.

மரக்கறி எண்ணெய், உருளைக்கிழங்கி, வெங்காயம், சீனி என்பவற்றின் இறக்குமதித் தீர்வையை சடுதியாக உயர்த்தியதன் மூலம் சந்தையில் அவற்றின் விலையை அரசு அதிகரித்துள்ளது. இந்தப் பொருள்களுக்கான தீர்வை வரி அதிகரிக்கப்படுவதற்கு அரசு தற்போது இலங்கையில் உருளைக்கிழங்கு, தேங்காய் எண்ணெய், வெங்காயம், சீனி என்பவற்றின் உற்பத்திகள் நிகழ்வதால், அத்தகைய தொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்களின் நலனைப் பேணவும், உள்ளூர் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவுமே குறித்த பொருள்களின் இறக்குமதி வரி அதிகரிக்கப் படுகின்றது. இவ்வாறு இறக்குமதி வரி அதிகரிக்கப்படுவதால் ஒருபோதும் சந்தையில் அந்தப் பொருள்களின் விலையேற்றம் நிகழாது என்று அறிவித்திருந்தது.

ஆனால் யதார்த்தம் அதற்கு நேர்விரோதமாக இருந்தது. அரசு விலையேறாது என்று அறிவித்த கையோடே வர்த்தகர்கள் வரியேற்றம் செய்யப்பட்ட பொருள்களின் விலையைக் கூட்டிவிட்டார்கள். கேட்டால், 'ரக்ஸை' கூட்டினால் விலையேறும் தானே என்று சொல்லும் கடைக்காரர்களிடம் , இல்லையில்லை. அரசாங்கம் விலையேறாது எண்டு சொன்னதே என்று திருப்பிக் கதைப்பவர்களும் உண்டு. அப்படிக் கதைப்பர்களை கடைக்காரர்கள் மனநலம் பாதிக்கப்பட்டவர்களைப் பார்ப்பது போல ஏற இறங்க நோக்கிவிட்டு, அப்பிடியெண்டா நீங்க மைத்திரியிட்ட இல்லாட்டி ரணிலிட்ட போய் சாமானை வாங்குங்கோ.இஞ்ச இதுதான் விலை என்று சொல்கிறார்கள். இப்படிக் கதைப்பவர்கள் முன்னால் வேறென்ன செய்ய முடியும்? வாயை மூடிக் கொண்டு வரவேண்டியதுதான்.

இப்படி மறைமுகமாக பொருள்களின் விலைகளை உயர்த்தும் நல்லாட்சி அரசு, உலகச் சந்தையில் படுபாதளத்தில் வீழ்ந்த எரிபொருளின் விலையை மட்டும் ஏன் குறைக்காமல் இருக்கிறது?எரிபொருளை உள்ளூரில் எவரும் உற்பத்தி செய்வதில்லையே. தொங்குபொறியில் ஆடிக்கொண்டிருக்கும் இலங்கைப் பொருளாதாரத்தை பெற்றோலியம் போன்ற பொருள்களின் மூலம் கிடைக்கும் வருமானமே ஓரளவுக்கு கீழே வீழ்ந்துவிடாமல் தாங்கிக் கொண்டிருக்கிறது. இல்லாவிட்டால் இப்போது மிதக்க விடப்பட்டிருக்கும் ரூபாவின் பெறுமதி முற்றாகவே மூழ்கிப் போய்விடலாம். எனவேதான் உலகச் சந்தையில் எரிபொருள் விலை குறைந்ததைக் கண்டும் காணதது போல இலங்கை அரசு நடந்து கொள்கிறது. இல்லாவிட்டால் இப்போது இருப்பதைக் காட்டிலும் 20 ரூபாவாவது எரிபொருளின் விலையைக் குறைக்க முடியும். அப்படி விலைக்குறைப்பு நிகழ்ந்தால் எரிபொருளைப் பயன்படுத்தி நடைபெறும் உற்பத்தி பொருள்களின் விலையும் குறையும். போக்குவரத்துக் கட்டணம் சரியும். மின்சாரக் கட்டணமும் வெகுவாகக் குறையும். ஆனால் அரசு அப்படி எரிபொருளின் விலையை இப்போதைக்கு குறைக்காது போலவே தெரிகிறது.


**உலகச் சந்தையில் எரிபொருள் விலை குறைந்ததைக் கண்டும் காணதது போல இலங்கை அரசு நடந்து கொள்கிறது. இல்லாவிட்டால் இப்போது இருப்பதைக் காட்டிலும் 20 ரூபாவாவது எரிபொருளின் விலையைக் குறைக்க முடியும். அப்படி விலைக்குறைப்பு நிகழ்ந்தால் எரிபொருளைப் பயன்படுத்தி நடைபெறும் உற்பத்தி பொருள்களின் விலையும் குறையும். போக்குவரத்துக் கட்டணம் சரியும். மின்சாரக் கட்டணமும் வெகுவாகக் குறையும். ஆனால் அரசு அப்படி எரிபொருளின் விலையை இப்போதைக்கு குறைக்காது போலவே தெரிகிறது.**

ஏற்கனவே ஆட்சி செய்த மஹிந்த தலைமையிலான அரசு, திறைசேரியை வழித்து துடித்ததோடு மட்டுமல்லாமல் உலக நாடுகளிடம் சொல்ல முடியாத அளவுக்கு கடன்களையும் வாங்கிக் குவித்துவிட்டுச் சென்றுள்ளது. அத்தோடு சர்வதேசத்தோடு மல்லுக்கட்டியதன் விளைவாக ஏற்றுமதிப் பொருள்களுக்கான ஜி.பி.எஸ் வரிச் சலுகையையும் இழந்துள்ளது. இதனால் ஏற்றுமதிப் பொருள்கள் மூலம் கிடைக்கும் வருமானம் வெகுவாகக் குறைந்துவிட்டது. இப்படி மஹிந்த அரசு செய்த வினைகளுக்கான -ஜெனீவா மனித உரிமைகள் அறிக்கை உட்பட - விளைவுகளைமைத்திரி தலைமையிலான அரசு அறுவடை செய்வதாலேயே இலங்கைப் பொருளாதாரம் இப்படித் தள்ளாடுகின்றது.

இப்படித் தள்ளாடிக் கொண்டிருக்கும் இலங்கைப் பொருளாதாரத்தை உவர் நீர் வாழ் முதலைகளும் தம் பங்குக்கு கடித்துக் குதறத் தொடங்கியுள்ளன.

முதலைகள் எப்படி இலங்கைப் பொருளாதாரத்தைச் சிதைக்க முடியும்? என்று சிலர் யோசிக்கலாம். உண்மையில் இப்போது இலங்கைக்கு பிரதான வருவாயைத் தருவது தேயிலையோ, தைத்த ஆடைகளோ அல்ல. மாறாக சுற்றுலாத் துறை மூலமே இலங்கைக்கு அதிக வருவாய் கிடைக்கின்றது. அப்படி வரும் வெளிநாட்டுப் பயணிகள் காலி, காலி முகத்திடல் முதலான கடற்கரைகளிலேயே பொழுதை அதிகம் கழிப்பது வழக்கம். பாதுகாப்பான, ரம்மியமான கடற்கரைகள் என்பதாலேயே இலங்கைக் கடற்கரைகளைத் தேடி வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் ஓடிவருகின்றார்கள். அதற்கு ஆப்பு வைத்து விட்டன முதலைகள். கடந்த சில தினங்களாக காலி, காலி முகத்திடல், கல்கிசை போன்ற கடற்கரைப் பகுதிகளில் ஆபத்தான உவர்நீர் முதலைகள் தென்படத் தொடங்கியுள்ளன. இதனால் சுற்றுலாப் பயணிகளின் வரவில் வீழ்ச்சி ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எல்லாப் பக்கமும் அடிவாங்கிக் கொண்டிருக்கும் இலங்கைப் பொருளாதாரத்தை முதலைகளும் தம் பங்குக்கு கடிக்கின்றன. என்ன நடந்தாலும் பாதிக்கப்படுவதென்னவோ அப்பாவிப் பொதுமக்கள் தான். நல்லாட்சி வந்தாலும், பொல்லா ஆட்சி வந்தாலும் அப்பாவி மக்களின் வாழ்க்கைக் காட்சி மட்டும் மாறப்போவதில்லை என்பதுதான் உண்மை.

# சிம்மசொப்பனம் - 41



அதேபோல் எத்தன்கய கூட்டாளிகளையோ தன்னோடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதிலும் அவருக்குச் சந்தேகம் இருந்ததில்லை. பண்ணையார் வீட்டுப் பிள்ளைகள் கூடாது. செல்வந்தர்களின் பிள்ளைகள் கூடாது. அரசுக்கு ஆதரவாகச் செயல்படும் ஆள்கள் கூடாது. பணம் சம்பாதிக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் கூடாது. வாதாடப் போவது தொழிலாளர்களுக்காகவும் விவசாயிகளுக்காகவும் என்பதால் அவர்களைச் சேர்ந்தவர்களே வழக்கறிஞராகச் சேர வேண்டும். இருவர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பேரூந்து ஓட்டுனராகச் செயல்பட்டு பிறகு வழக்கறிஞராக மாறிய ஜோர்ஜ் அஸ்பியாசோ மற்றும் ராஃபேல் ரெசண்டே. இவர் ஓர் ஏழைக்குடும்பத்திலிருந்து வந்தவர். அடுத்து அலுவலகம் தேடும் பணி தொடங்கியது. நிறைய அலைந்தனர். ஆனால் இவர்களுகளுக்கு இடம் தர யாரும் முன் வரவில்லை. அப்படியே ஒப்புக் கொண்டாலும் அது இவர்கள் கேட்கும் வாடகைக்கு கிடைக்கவில்லை. இறுதியில் ரொசாலியோ கட்டிடத்தில் ஓர் அறை கிடைத்தது. முன் பணம் 120 பிசோ. மாத வாடகை 60 பிசோ. மூவரிடமும் 80 பிசோ இருந்தது. கையிலிருந்த பணத்தைக் கொடுத்து விட்டு காஸ்ட்ரோ அந்த வீட்டுக்காரருக்கு ஓர் உரை நிகழ்த்தினார். அதெல்லாம் முடியாது என்று மறுத்த அவர், பிறகு வீட்டுச் சாவியை கொண்டு வந்து காஸ்ட்ரோவின் கையில் கொடுத்து விட்டு போய் விட்டார். அடுத்து மேசை, நாற்காலிகள், புத்தக அலுமாரி, ஒரு சிறிய தட்டச்சு இயந்திரம் என்று தவணை முறையில் வாங்கினார்கள். எல்லாம் தயாராகி விட்டது. இனி மளமளவென்று வழக்குகளை எடுத்துக்கொண்டு நடத்த வேண்டியது தான் மிச்சம்.

முதல் வழக்கு தொடுத்தவர் ஒரு மரக்கட்டை வியாபாரி. அவர் ஒருவருக்கு கடன் கொடுத்திருந்தார். 'கடன் வாங்கியவர் கடனைத் திருப்பித் தர மறுக்கிறார். காஸ்ட்ரோ தான் அதை எப்படியாவது வாங்கித் தர வேண்டும்'. 'இதோ இப்போதே இந்த வழக்கை முடித்து வைக்கிறேன்' என்று கறுவியபடி கடன் வாங்கியவரின் வீட்டுக்கு விரைந்தார் காஸ்ட்ரோ. அவர் ஒரு தக்சர். "என் கட்சிக்காரரிடம் வாங்கிய பணத்தை ஏன் கொடுக்கவில்லை. நான் யார் தெரியுமா?" என்று அதட்டினார். அந்தத் தக்சரின் மனைவி கலங்கிப் போய் விட்டார். தன் வீட்டு நிலைமையை எடுத்துக் கூறினார். பெட்டிப் பாம்பாக அடங்கிய காஸ்ட்ரோ விறுவிறுவென்று வெளியே வந்து தெரிந்தவர்களிடம் கடன் வாங்கி ஐந்து செண்டை அவரிடம் கொடுத்து விட்டு கிளம்பி விட்டார்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 692

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | | 5 | 6 |
| 7 | | | 8 | | ■ | 9 | |
| 10 | | ■ | 11 | | 12 | | |
| | ■ | 13 | | ■ | 14 | | ■ |
| ■ | 15 | | | 16 | | ■ | 17 |
| 18 | | | ■ | | ■ | 19 | |
| ■ | | ■ | 20 | | 21 | | |
| 22 | | | | ■ | 23 | | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

**மேலிருந்து கீழ்**

1. அழிவு.
2. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்.
3. எரிய உதவும்.
4. அன்னை.
5. அரசாணைப் படிவம்.
6. மத்திய இடம்.
8. ஒரு சரக்குப் பொருள்.
12. மனைவி.
13. சிறிது.
15. மேன்மை.
16. துக்கம்.
17. ஆசைப்படு.
19. திரு.
20. கூழ் நிலை.
21. வாழ்.

**இடமிருந்து வலம்**

1. வாதம் செய்.
4. பயப்படாத தன்மை.
7. பண்பாடு.
9. கழித்தல் அடையாளம்.
10. பொட்டலம்.
11. அமைதிப்பேச்சு இதற்காக.
13. கணித அடையாளம்.
14. ஓர் குடிவகை.
15. ஊக்கத்தை ஏற்படுத்துவது.
18. ஒரு தானிய வகை.
19. மரம்.
20. பெருவெளிப்பிரதேசம்.
22. கசையடி கொடுப்பது இதனால்.
23. பூட்டான் தலைநகர்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 692

சொற்சிலம்பம் போட்டி 692ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 14 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே ஒக்ரோபர் 02ஆம் மற்றும் ஒக்ரோபர் 28ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண் ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 690க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.சலிப்புத்தன்மை, 2. மடை, 3.துவாதசி, 4. வடிவு, 5. ஆடை, 8. கல்வி, 9.உட்படுதல், 10.தகடு, 13.தைலம், 14.கால்வாசி, 16.தலை, 17.நல்ல, 19.சதி,

**இடமிருந்து வலம்**

1.சமத்துவம், 6.கிடை, 7.வாடி, 8.கடை, 9.உதவுதல், 11.புரட்சி, 12.சவிதை, 14.காடு, 15.தண்டுதல், 17.நம், 18.தலைவாசல், 20.மையல், 21.சிதிலம்,

## போட்டி இல. 689இல் பரிசு வெற்றியோர்

**மேலிருந்து கீழ்**

| பரிசு | வெற்றியாளர் |
|---|---|
| 1 ஆம் பரிசு | ஜெ.வெஸ்மிலா, இல 9/1, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். |
| 2 ஆம் பரிசு | க. கௌரிதேவி, வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை. |
| 3 ஆம் பரிசு | வே. இராசநாயகம், சோறன்பற்று, பளை. |

## பாராட்டுப் பெறுவோர்

(1) **ஞா. துரை,**
இல 85/4, கார்மல் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

(2) **ஐ. விஜயபாலன்,**
இல 7, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(3) **திருமதி .தி. புவனேஸ்,**
நாவற்குழி கிழக்கு,
கைதடி.

(4) **திருமதி சி. புஸ்பராணி,**
"வசந்தபவனம்"
மருதடிமேற்கு,
சாவகச்சேரி.

(5) **வி.செல்வநாயகம்,**
சிவன்கோவில் வீதி,
புத்தூர்.

# மாவீரன் அலெக்சாண்டரின் கடைசி 3 ஆசைகள்



**உலகத்தையே ஜெயிக்க வேண்டும் என்று கிளம்பியவன் ... மாவீரன் அலெக்சாண்டர். கிரேக்க தத்துவ மேதை அரிஸ்டோட்டில் அவனுக்கு குருவாக இருந்தார்.. தான் கலந்து கொண்ட எந்த போரிலும் தோல்வியே அடையாத வீரன்.**

**உலகையே தான் காலடியில் கிடத்திய மாவீரனின் இறுதி கட்டத்தில், அவனது கடைசி விருப்பங்கள் என்ன? இது நமது வாழ்வில் ஒவ்வொருவருக்கும் தேவையான பாடங்கள்.**

=====================

பல போர்க்களங்களில் ஈடுபட்டு, உடல் தளர்ந்து விரக்தியில் சொந்த நாடு திரும்பிக் கொண்டு இருந்தான். மரணப் படுக்கை. இனி உயிர் பிழைக்க முடியாது என்று தெரிந்து விட்டது. சுற்றிலும் அவனது படைத் தளபதிகள், வைத்தியர் கள்.. சோகத்தில் அவன் முகத்தை பார்த்துக் கொண்டு இருந்தனர்.

சாகும் முன் தன் தாயின் முகத்தை கடைசியாக ஒரே ஒரு தடவை பார்க்க ஆசைப்பட்டான்.. அது நிராசை என்று அவனுக்கும் தெரிந்து இருந்தது.

தனது உயிரின் எஞ்சி இருந்த கடைசி சக்தியை திரட்டி பேச ஆரம்பித்தான்....

அருகில் இருந்த முக்கிய தளபதியைப் பார்த்து,

"நண்பா! எனக்கு மூன்று கடைசி ஆசைகள்.. நிறைவேற்றித் தருவாயா?"

"சொல்லுங்கள், சக்கரவர்த்தி."



"முதலாவதாக , நான் இறந்த பிறகு, என் சவப் பெட்டியை , எனக்கு மருத்துவம் பார்த்த வைத்தியர்கள் மட்டுமே தூக்கிச் செல்ல வேண்டும்..."

"இரண்டாவதாக என்னுடைய மரண ஊர்வலம் செல்லும் போது , நான் இதுவரை வெற்றி கண்டபோது , கவர்ந்த தங்க, வைர நகைகளை வழி தோறும் சுடுகாடு வரையிலும், தரையில் கீழே போட்டுக்கொண்டே செல்ல வேண்டும்"

"மூன்றாவதாக, சவப் பெட்டிக்கு வெளியே என் கைகள் இரண்டும் தெரியும் படி, என்னை மண்ணில் புதையுங்கள்.."

"அங்கு இருந்த அனைவரும் கண்டிப்பாக நிறை வேற்றுவோம்" என்று ஒரே குரலில் உறுதி கூறினார்கள்... அனைவருக்கும் ஆனால் அதற்கான காரணம் மட்டும் புரியவில்லை..

அருகில் இருந்த பிரதான தளபதி அதற்கான காரணத்தை தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் ,

"மா மன்னா! என் இப்படி கூறுகிறீர்கள் என்று தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டான்.

வெளிறிப் போன முகத்துடன், வறண்டு போன நாவைத் தடவியபடியே அந்த மாவீரன் பேசினான்.

"ஒன்றும் இல்லை, நண்பா, எனக்கு வாழ்க்கை இப்போது தான் கற்றுக் கொடுத்த பாடங்கள் அவை. நாளைக்கு உலகத்திலே உள்ளவர்களுக்கு ஒரு பாடமாக இருக்கும்."

மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்குது.. உடம்பு புரட்டிப் போடுது.. எல்லார் கண்ணிலும் கண்ணீர்.

"என்னிடம் உலகத்திலேயே தலை சிறந்த மருத்துவர்கள் இருக்கிறார்கள்.. ஆனாலும், பாருங்கள் , போகப் போகின்ற உயிரை, யாரும் தடுக்க முடியவில்லை. நான் எவ்வளவோ சம்பாதித்தேன். கொள்ளை அடித்தேன். ஆனால் மண்ணில் புதைக்கின்றபோது, அதில் இருந்து, ஒரு துளி கூட நம்முடன் வரப் போகின்றது இல்லை. எல்லாம் மண்ணோடு தான்... நான் எவ்வளவோ பேராசையில் இருந் தேன்.. என்ன வேண்டுமோ அனு பவித்தேன். எல்லாச் செல்வங் களும் இருந்தது... கடைசில், நான் எதையும் கையிலே கொண்டு போகவில்லை.. என் கையைப் பார்.. வெறும் கையோடு வந்தேன், வெறும் கையோடு தான் போகிறேன்."



இதில் இருந்து நமக்கு என்ன தெரிகின்றது?

உன்னிடம் என்னதான் வசதி இருந்தாலும், சக்தி இருந்தாலும், மருத்துவம் பார்க்கின்ற வசதி இருந்தாலும், விதி என்று ஒன்று வந்தால் யாரும் ஒன்றும் செய்ய முடியாது.... உடம்பை ஒழுங்காப் பார்த்துக் கொள்கின்றவர்களுக்கே இந்த கதி... நமது உடம்பைக் கூட பார்த்துக் கொள்ளாமல், சொத்து,

**(22 ஆம் பக்கம் பார்க்க)**



# அதிரடியில் சமந்தா



சினிமாவில் சம்பாதித்ததை சினிமாவிலேயே முதலீடு செய்யும் பழக்கம் பெரும்பாலானவர்களுக்கு கிடையாது. ஆனால் கமல் போன்ற குறிப்பிடத்தக்க சிலர் மட்டுமே அதைச் செய்து வருகின்றனர். மேலும், சில முன்னணி நடிகர்கள் தங்களது சம்பளத்துக்குப் பதிலாக அந்தப் படங்களின் நகர உரிமையையோ அல்லது வேறு இடங்களின் உரிமைகளையோ வாங்கி அவற்றை விநியோகஸ்தர்களிடம் விற்றுப் பெரும் தொகையை சம்பாதிப்பது தான் சினிமாவில் நீண்டகாலமாக நடந்து வருகிறது. இந்த விடயத்தில் நடிகைகள் ரொம்ப உஷார். அதாவது நடித்து முடிப்பதற்குள் மொத்த சம்பளத்தையும் கைப்பற்றிக்கொள்வார்கள், அவற்றை அசையா சொத்துக்களில் முதலீடு செய்து எந்தச் செய்கூலியோ சேதாரமோ இல்லாமல் தப்பித்து விடுவார்கள்.


இவ்வளவு காலமும் சமந்தாவும் அப்படித்தான் இருந்து வந்தார். ஆனால், தற்போது அவரும் திடீரென விநியோகஸ்தராகியிருக்கிறார். சூர்யாவுடன் இரண்டாவது முறையாக தான் இணைந்துள்ள 24 படத்தை ஆந்திராவில் சமந்தாதான் வெளியிடுகிறாராம்.

# அதிக விலையில் தனி ஒருவன்

தமிழில் வெளிவந்து வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் படம் தனி ஒருவன். படம் வெளியாகி வெற்றியானவுடன் தெலுங்கிலும், ஹிந்தியிலும் மறுபதிப்புச் செய்ய அதன் உரிமையை வாங்க பலர் போட்டியிடுவதாக செய்திகள் வெளியாகின. தெலுங்கு மறுபதிப்பில் ராம் சரண், மகேஷ் பாபு ஆகியோர் நடிக்கப் போவதாகவும் சொன்னார்கள். ஆனால், மகேஷ் பாபு எந்த ஒரு மறுபதிப்பு படத்திலும் நடிப்பதில்லை என்ற கொள்கை வைத்திருப்பவர். அதனால், அவர் அந்தப் படத்தில் நடிக்க மாட்டேன் என்றும் சொல்லிவிட்டார். ஆனால், ராம் சரண் படத்தைத் தெலுங்கில் மொழிமாற்றம் செய்து நடிக்கத் தயாராக இருப்பதாகச் சொன்னார்கள்.

தற்போது படத்தின் தெலுங்கு உரிமை பல கோடிகளுக்கு விற்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின் றன. சுமார் 2 கோடி ரூபாய்க்கு அந்த உரிமை யை விற்கப்பட் டிருக்கலாம் என்றும் சொல்கிறார்கள். பிரபல தயாரிப்பாளரான டிவிவி தனன்யா அந்த உரிமை வாங்கியிருக்கிறார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.





சினிமாவில் தான் நடித்து சம்பாதிப்பதில் ஒரு பெரு
செலவு செய்து வருகிறார் ஹன்சிகா. அந்த வகையில்,
சிறுமிகளின் படிப்பு செலவுகளை ஏற்றிருக்கும் அவர்,
வருவதோடு, புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்
வருகிறார்.

அப்படி தன்னால் பராமரிக்கப்பட்டு வருபவர்களை
வரும் ஹன்சிகா, தனது பிறந்த நாள் மட்டுமின்றி, நே
கேக் வெட்டி கொண்டாடி அவர்களை சந்தோசப்படுத்
சேவை மனப்பான்மை சினிமா வட்டாரங்களில் அவர்
விட்டுள்ளது.

மேலும், சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்க
அங்கே மார்பக புற்று நோயால் பாதிக்கப்பட்ட 10 பெ
ஏற்றுள்ளார்.

# ஹன்சிக தாராளம்







# புலியில் ராணி யார்?

தமிழில் புலி படத்தின் மூலம் 29 வருடங்கள் கழித்து மீண்டும் நடிக்க வந்துள்ளார் அந்த நாளைய கனவுக் கன்னி ஸ்ரீதேவி. இன்றும் சிலருக்கு அவர் கனவுக் கன்னியாகத்தான் தெரிந்து கொண்டிருக்கிறார். சரித்திரப் படமான புலி படத்தில் ராணி கதாபாத்திரத்தில் நடித்துள்ளார் ஸ்ரீதேவி.

புலிப்பட முன்னோட்டத்தில் ஸ்ரீதேவியைப் பார்க்கும்போது கம்பீரத்துடனும், நடை, உடை, ஆடை ஆகிய தோற்றத்துடன் தன் நடிப்பில் மிரள வைத்துள்ளார் என்றுதான் சொல்ல வேண்டும். இந்தப் படம் தெலுங்கு தேசத்தில் வாழ்ந்த வீர மகாராணியான ருத்ரமாதேவியின் உண்மை வரலாற்றை ஒட்டி எடுக்கப்பட்டுள்ள படம். 30 வயதைக் கடந்தாலும் இன்றைய ரசிகர்களின் மற்றுமொரு கனவுக் கன்னியாக இருக்கும் அனுஷ்காதான் ருத்ரமாதேவி ஆக நடித்துள்ளார். இவருடைய தோற்றமும், ஆடை, நடை, உடை அணிகலன்கள் ஆகியவையும் படத்தின் முதல் பார்வை வெளியான நாளிலிருந்தே பேசப்படுகின்றது.

ாதிப்பதில் ஒரு பெரும்பகுதியை சமூக சேவைகளுக்காக
ிகா. அந்த வகையில், மும்பையில் பல ஏழை சிறுவர்
ஏற்றிருக்கும் அவர், முதியோர் இல்லம் நடத்தி
திக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவியும் செய்து

ட்டு வருபவர்களை அடிக்கடி மும்பை சென்று கவனித்து
ள் மட்டுமின்றி, நோயாளிகளின் பிறந்த நாட்களையும்
ளை சந்தோசப்படுத்தி வருகிறார். ஹன்சிகாவின் இந்த
ட்டாரங்களில் அவர் மீதான மதிப்பை இன்னும் உயர்த்தி

ன்றில் பங்கேற்பதற்காக திருச்செந்தூர் சென்ற ஹன்சிகா,
திக்கப்பட்ட 10 பெண்களின் மருத்துவ செலவையும் தான்

# சிகாவின்
# ளம்



தமிழ், தெலுங்குப் பட உலகில் முன்னணிக் கதாநாயகியாக இருந்தவர் ஸ்ரேயா. இவர் அறிமுகமான முதல் தமிழ் படம், 'எனக்கு 20 உனக்கு 18'. இந்த படம் 2003 இல் வெளிவந்தது. ஜெயம் ரவியுடன் நடித்த 'மழை' படம் மேலும் அவரைப் பிரபலப்படுத்தியது. 'சிவாஜி' படத்தில் ரஜினிகாந்த் ஜோடியாக நடித்து முன்னணிக் கதாநாயகியாக உயர்ந்தார்.

இந்தப் படத்துக்கு பின் அவருக்கு பட வாய்ப்புகள் குவிந்தன. விஜய், விக்ரம், விஷால், தனுஷ், ஜீவா என பெரிய கதாநாயகர்களுடன் நடித்தார். தமிழில் கடைசியாக நடித்த 'ரவுத்திரம்' படம் 2011 இல் வந்தது. அதன்பிறகு இவருக்கு படங்கள் இல்லை. ராஜபாட்டையில் ஒரு பாடலுக்கு மட்டும் ஆடிவிட்டுப்போனார்.

தெலுங்கில் நடித்த 'பவித்ரா', கன்னடத்தில் நடித்த 'சந்திரா' படங்களை தமிழிலும் மொழி மாற்றம் செய்து வெளியிட்டனர். இந்தியில் தயாரான 'திரிஷ்யம்' படத்தில் அஜய் தேவ்கான் ஜோடியாக நடித்தார். இந்த படம், சமீபத்தில் வெளியாகி தோல்வி அடைந்தது. அதனால் மதிப்பை தக்கவைக்க ஸ்ரேயா போராடி வருகிறார்.



# ஓரங்கட்டப்படும் ஸ்ரேயா



# சர்க்கரை நோயா? கவலை வேண்டாம்!

இன்றைய நாகரிக உலகில் நிறையப் பேருக்குச் சர்க்கரை, இரத்த அழுத்த நோய் என்பது சாதாரணமாக இருக்கிறது. இவர்கள் அதிலிருந்து மீள உணவுக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

சர்க்கரை, இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் ஒரு நாளைக்கு ஒரு குறிப்பிட்ட கலோரி அளவு கொண்ட உணவினைச் சாப்பிட வேண்டுமென உணவு நிபுணர்கள் நிர்ணயித்துக் கொடுத்திருக்கிறார் கள். இந்தச் சரிவிகித உணவு முறையினை சர்க்கரை, அழுத்த நோய் உள்ளவர்கள் மட்டுமல்லாது குடும்பத்திலுள்ள மற்றவர்களும் கூடப் பின்பற்றலாம். அதனால் ஆரோக்கியமான வாழ்வு வாழ ஏதுவாகிறது.

சர்க்கரை வியாதி உள்ளவர்கள் சரிவிகித உணவைச் சாப்பிட்டால் மட்டும் போதாது. நேரம் தவறா மல் சாப்பிடுவது மிகவும் முக்கி யம். இவர்கள் ஒரே சமயத்தில் நிறைய உணவைச் சாப்பிடாமல் இரண்டு மூன்று மணிக்கு ஒரு தரம் காய்கறி சூப், மோர் போன்ற பானங்களைப் பருகுவதால் உடலுக்குத் தேவையான சக்தி கிடைப்பதுடன் சர்க்கரையின் அளவும் அதிகமாகாமல் தடுத்துக் கொள்ளலாம்.

**சர்க்கரை நோய் கட்டுப்பாட்டிற்குள் இருக்க சில வழிகள் :**

தினமும் காலையில் எழுந்தவுடன் நிறையச் சுத்தமான தண்ணீர் குடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் ஊற வைத்த வெந்தயத்தைத் தினமும் வெறும் வயிற்றில் இரண்டு 'ஸ்பூன்' அளவு சாப்பிட்டு வரலாம். மேலும் வேப்பிலைக் கொழுந்தை தினமும் சாப்பிட்டு வந்தாலும் ஆரம்ப நிலையிலுள்ள சர்க்கரை நோய் குணமாகும். சர்க்கரை நோயாளி கள் நார்ச்சத்து மிகுதியாக உள்ள வெண்டைக் காய், கீரை வகைகளை தினசரி உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும். அரிசிச் சோற்றுக்குப் பதிலாக கோதுமை, கம்பு, கேழ்வரகு ரொட்டிகளை சாப்பிடுவது நல்லது. எண்ணெய் குறைவாகச் சேர்க்க வேண்டும்.

நடப்பது என்பது சர்க்கரை வியாதிக்காரர்களுக்கு மிகத் தேவையான விஷயமாகும். தினசரி காலை நேரங்களில் வேகமாக நடக்கும் நடைப்பயிற்சியை மேற்கொள்ளலாம். காலையில் நேரம் கிடைக்காதவர்கள் மாலையில் நடைப்பயிற்சியை செய்யலாம். சாப்பிட்டவுடன் உட்காரவோ, உடனே தூங்கவோ கூடாது. ஒரு பத்து நிமிடமாவது நடந்துவிட்டு, பிறகுதான் தூங்கச் செல்ல வேண்டும். இதனால் உடலில் சர்க்கரை அதிகமாகும் அளவு குறைக்கப்படும்.

**சர்க்கரை நோயாளிகளுக்கான உணவு வகைகள் :**

Diet And Exercise

உடலில் உள்ள கணையச் சுரப்பியில் இன் சுலின் உற்பத்தி பாதிக்கப்படு வதால் சர்க்கரை நோய் ஏற்படு கிறது.

சர்க்கரை நோயில் இரண்டு வகை உண்டு.

1.உடலில் இன்சுலின் உற்பத்தி அறவே இல்லாமல் போய் ஆயுள் முழுவதும் இன்சுலின் போட்டுக்கொள்ள வேண்டிய நிலை. இந்த முதல்வகை சர்க்கரை நோய்க்கு ஐடிடிஎம் (Insulin Dependent Diabetes Melitus) என்று பெயர். இந்த வகைச் சர்க்கரை நோயாளி கள் ஆயுள் முழுவதும் இன்சுலின் ஊசி மருந்து போட்டுக் கொள்ள வேண்டியிருக்கும். இந்த வகை சர்க்கரை நோய் பெரும்பாலும் குழந்தைகளுக்கு வரக் கூடியது.

2. உடலில் இன்சுலின் உற்பத்தி போதிய அளவுக்கு உற்பத்தி ஆகாததால் ஏற்படுவது இரண்டாவது வகை சர்க்கரை நோயாகும். இந்த வகை சர்க்கரை நோய்க்கு என்ஐடிடிஎம் (Non Insulin Dependent Diabetes Melitus) என்று பெயர். இந்த வகை சர்க்கரை நோயாளிகள் ஆயுள் முழுதும் மாத்திரை சாப்பிட வேண்டியிருக்கும்.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இரண்டாவது வகை சர்க்கரை நோய் காரணமாகப் பாதிக்கப்படுவோர்தான் அதிகம். உடல் பருமன், உடல் உழைப்பு இன்மை முறையற்ற உணவுப் பழக்கவழக்கங்கள் காரணமாக இந்த வகைச் சர்க்கரை நோய் ஏற்படுகிறது.

சர்க்கரை நோய் வந்து விட்டால், இரத்தத்தில் சர்க்கரை அளவைத் தொடர்ந்து கட்டுப் பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும். சர்க்கரை நோய் சிகிச்சையில் உணவுக் கட்டுப்பாடு முக்கியமான பங்கை வகிக்கிறது.

சர்க்கரை நோய் சிகிச்சையை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1.உணவுக்கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சி
2.உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி மற்றும் மருந்துகள்
3. உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி மற்றும் இன்சுலின் ஊசி மருந்து என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

**உணவுக் கட்டுப்பாடு தரும் பயன்**

ஒருவருக்கு சர்க்கரை நோய் இருப்பது தெரிய வந்தவுடன் பயப்படத் தேவையில்லை. சாப்பிட்டு ஒன்றரை மணி கழித்து எடுக்கப்படும் இரத்தத்தில் இரத்த சர்க்கரையின் அளவு 180 மில்லி கிராமுக்கு கீழ் இருக்கும் நிலையில் உணவுக் கட்டுப்பாடு மற்றும் தினசரி உடற்பயிற்சி போதுமானது. மாத்திரை தேவையில்லை. ஆக 20 சதவிகித சர்க்கரை நோயாளிகள் மாத்திரைகளின் தேவையின்றி உணவுக் கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சி மூலமே இரத்தத்தில் சர்க்கரை அளவை நல்ல கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியும். இவ்வாறு ஒரு நோயாளி உணவுக்கட்டுப் பாட்டில் தொடர்ந்து விரும்பி அக்கறை செலுத்தினால் சர்க்கரை நோய் காரணமாக உடலில் ஏற்படும் விளைவுகளைத் தடுக்க முடியும். ஏனெனில் கட்டுப்பாட்டில் இல்லாத சர்க்கரை நோய் காரணமாக இதயம், சிறுநீரகங் கள், கண்கள், பாதங்கள் பாதிக்கப் படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

உங்களுக்கு சர்க்கரை நோய் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி முதலில் உயரத்துக்கு ஏற்ற எடையைப் பராமரிப்பது அவசியம். ஒவ்வொருவருக்கும் உயரத்துக்கு ஏற்ற எடை இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள சராசரி கணக்கு ஒன்று உள்ளது.

அதாவது உங்களது உயர அளவிலிருந்து 100-ஐக் கழிக்க வரும் எண்ணே உங்களது சரியான எடை அளவு. உதாரணமாக 170 செ.மீ உயரம் இருந்தால், அவரது எடை 70 கிலோ கிராம்தான் இருக்க வேண்டும். அவரே சர்க்கரை நோயாளியாக இருந்தால்

(18 ஆம் பக்கம் பார்க்க)

**உங்களது உயர அளவிலிருந்து 100-ஐக் கழிக்க வரும் எண்ணே உங்களது சரியான எடை அளவு. உதாரணமாக 170 செ.மீ உயரம் இருந்தால், அவரது எடை 70 கிலோ கிராம்தான் இருக்க வேண்டும். அவரே. சர்க்கரை நோயாளியாக இருந்தால் உடல் எடை 10 சதவிகிதம் குறைவாக இருப்பது நல்லது. அதாவது 63 கிலோ கிராம் இருந்தால் நல்லது. சர்க்கரை நோயாளிகள் சமச் சீரான உணவில் தினமும் கவனம் செலுத்துவது அவசியம்.**




# புகுந்த வீட்டுக்குச் செல்லப் போகும் பெண்ணா நீங்கள்...?

அருவி



**ஒரு** பெண்ணானவள் திருமணம் செய்யும் போது, அவள் விரும்பியோ , விரும்பாமலோ தனது பிறந்தசூழல், வளர்ந்த சூழல் , தனது குடும்ப உறுப்பினர்கள் என எல்லாவற்றையும் விட்டு விட்டு தனது கணவன் வீட்டுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. கணவன் வீடும் (புகுந்த வீடும்) எப்போதும் இனிமையாக இருக்கும் என எந்த ஒரு பெண்ணும் எதிர்பார்க்க முடியாது. அங்கு புகுந்த வீட்டில் நிறையப் பேரைச் சமாளிக்க வேண்டியிருக்கும். அவ்வாறு அவர்களை கஷ்டப்பட்டு சமாளிப்பதற்கு, அவர்களுக்கு உங்களை பிடிக்கும் வகையில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தெரிந்திருந்தால், அவர்கள் அனைவரையும் எளிதில் அன்பால் வெல்ல முடியும். ஏன் நீங்களே அவர்களது செல்லமாக கூட மாற முடியும். புதிதாக ஒருவர் உங்கள் வீட்டுக்கு வந்தால், அவர்களை ஏற்பது சற்று கடினமோ, அப்படி தான், நீங்கள் செல்லும் வீட்டில் இருப்பவர்களும் உங்களை ஏற்க சற்று நாள்கள் ஆகும். ஆகவே அவர்களுக்கு உங்களை விரைவில் பிடிக்க, நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அனுபவசாலிகள் கூறுகின்றனர். அவற்றை நீங்களும் கடைப்பிடித்துப் பாருங்கள்.

**01.**திருமணம் ஆவதற்கு முன்பு அவர்களை சந்திக்க வேண்டும். அவ்வாறு சந்திக்கும் போது சற்று அழகாக, குடும்பப் பாங்கான பெண்ணைப் போல் அழகாக சேலையை அணிந்து, அவர்களை சந்தித்து பேச வேண்டும். மேலும் பேசும் போது, நன்கு கலகலப் போடு, அன்போடு பேச வேண்டும். அதிலும் சந்திக்கச் செல்லும் முன் எவ்வாறு பேச வேண்டும் என்று ஒரு முறை யோசனை செய்து கொண்டு செல்வது நல்லது.

**02.**மாமனார், மாமியார் நிறைய அனுபவம் உள்ளவர்கள், ஆகவே திருமணம் ஆன பின்பு, அவர்கள் எது சொன்னாலும் சரியாக இருக்கும் என்பதை புரிந்து நடந்து கொண்டால் நல்லது. அதிலும் அவர்கள் பழங்காலத்தவர். எனவே அவர்கள் என்ன சொன்னாலும், அது உங்களுக்கு பிடிக்கிறதோ, பிடிக்கவில்லையோ, அதற்காக அவர்களிடம் வாக்குவாதம் செய்யாமல், பொறுமையாக இருக்க வேண்டும். இவ்வாறெல்லாம் ஆரம்பத்தில் கொஞ்ச நாள்கள் நடந்து வந்தால், நீங்கள் நிச்சயம் அவர்களுக்கு ஒரு செல்லமாக மாறலாம்.


**03.**புகுந்த வீட்டுக்குச் சென்றால், அங்கு மாமனார், மாமியார் தான் அம்மா, அப்பா போன்று, எப்படி அம்மா, அப்பாவிடம் இருப்போமோ, அவ்வாறே அவர்களிடம் நடக்க வேண்டும். வாழ்க்கை என்றால் நிறைய புதிய மனிதர்களை சந்திக்க நேரிடும். ஆகவே அவர்களை மரியாதையுடன் நடத்த வேண்டும். இல்லை முடியாது என்று இருந்தால், ஒருபோதும் அவர்களுக்கு உங்களை பிடிக்காமல் போய்விடும். மேலும் இதனாலேயே பெரும்பாலான வீடுகளில் மாமியார், மருமகள் சண்டைகள் ஏற்படுகின்றன. ஆகவே இந்த பிரச்சனையைத் தவிர்க்க, அவர்களைத் தன் அம்மா, அப்பா போன்று நினைத்துப் பழக வேண்டும்.

**04.** கணவர் வீட்டுக்குச் சென்றால், அங்கு இருப்பவர்களுக்கு பிடித்தது, பிடிக்காதது என்பதை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். சரி, உங்களுக்கு உங்களது அப்பாவின் பிறந்தநாள் வந்தால், என்ன செய்யலாம் என்று யோசித்து, எவ்வாறு ஓர் அதிர்ச்சி கொடுப்பதைப் போல், மாமனார், மாமியாரின் பிறந்தநாள், திருமண நாள், பிடித்தது, பிடிக்காதது என்பவற்றை கேட்டு தெரிந்து கொண்டு, அதற்கேற்ப அவர்களுக்கும் ஓர் அதிர்ச்சி கொடுத்தால், அவர்கள் சந்தோஷத்துக்கு அளவில்லாமல் போய்விடுவதோடு, அன்று முதல் நீங்களே அவர்களது மகனை விட செல்லமாகிவிடுவீர்கள்.

**05.**எப்போது உங்கள் மாமியார், மாமனார் உங்களை அழைத்தாலும், அவர்களுக்கு மரியாதை கொடுக்கும் வகையில் சென்று, என்ன வேண்டும் என்பதை கேட்டு, அதை செய்ய வேண்டும். இதனால் அவர்களுக்கு உங்கள் மீது அன்பு அதிகரிக்கும்.

# பீற்றூட் அல்வா

## தேவையான பொருள்கள்



**01.** துருவிய பீற்றூட்
**02.**02 கிண்ணம் கொதிக்க வைத்த பால்
**03.** 1 கிண்ணம் சர்க்கரை
**04.** 1/2 கிண்ணம் நெய்
**05.** 2 மேசைக்கரண்டி ஏலக்காய் பொடி
**06.**1/2 கரண்டி பாதாம்
**07.**முந்திரி சிறிதளவு

## செய்முறை

**01.** முதலில் ஒரு வாணொலியில் 01 மேசைக்கரண்டி நெய் ஊற்றிக் காய்ந்ததும் , துருவி வைத்துள்ள பீட்றூட்டை சேர்த்து 3-5 நிமிடம் குறைவான தீயில் பச்சை வாசனை போக வதக்கி விட வேண்டும்.

**02.**பின்னர் அதில் பால் சேர்த்து 10 நிமிடம், குறைவான தீயில் மென்மையாகும் வரை வேக வைக்கவும்.

**03.**பால் வற்றும் வரை அடுப்பில் வைத்து, பின் அதில் சர்க்கரை சேர்த்து நன்கு கிளறி விட வேண்டும். அப்படி கிளறி விடும் கலவை அடிப்பிடிக்கும் வகையில் வரும் போது கொஞ்சம் கொஞ்சமாக நெய் சேர்த்து கிளறி, அல்வா பதத்துக்கு வரும் வரை கிளறி விட் வேண்டும்.

**04.** பின் ஏலக்காய் பொடி சேர்த்து கிளறவும் . அத்ன் பிறகு அல்வா வடிவில் நீங்கள் வடிவமைத்துக் கொள்ளுங்கள்.

# பெண்மையைப் போற்றுவோம்



அன்பு - இந்த
அழகான சொல்லுக்கு
முதல் அர்த்தம் அம்மா
எப்போதும் சீண்டி
தோல்விகளில் தூண்டி
தன்னை நமது
முதல் குழந்தையாகவே
காட்டிக் கொள்வாள் தங்கை
நம்மில் பாதியாக
நம் கரம் பற்றி
நம்மை முழுமையாக்குபவள்
மனைவி
நம் வாழ்வின்
அடையாளமாக
அங்கீகாரமாக
வசந்தம் தரும்
தேவதையாக மகள்

பெண்கள் இல்லாத உலகம்
நிச்சயம் சாத்தியப்படாது
பெண்கள் இல்லாத வாழ்க்கை
வாழ்க்கையாகாது
பெண்மையைப் போற்றுவோம்

இரா பூபாலன்

# நட்பும் காதலும்

மோகங்கள் விலகி
காதலி தோழியானால்
அன்னையின்
குணம்
பெற்றிடுவாளே

அமிர்தலிங்கம்



# பாலியல் கொலைகளின் தேசம்

- என்.ஜனகா




இது கொலைகளின் காலம் போலும். அதுவும் பெண்கள் வயது வேறுபாடின்றி, பாலியல் பசிக்காக வேட்டையாடப்பட்டுக் குதறப்படுகின்றார்கள். சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தின் புங்குடுதீவுப் பகுதியில் வித்தியா என்ற பாடசாலை மாணவி, காமுகர்களால் கூட்டு வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு, மிகக் கோரமான முறையில் கொலை செய்யப்பட்டார்.

அந்த அதிர்வு அடங்கு முதல் கிளிநொச்சி, உருத்திரபுரத்தில் இன்னொரு சிறுமி காணாமல் போனார். அந்த சிறுமிக்கு வயது 3 தான். குளிக்கச் செல்வதற்காக அயல்வீட்டுச் சிறுவனின் சைக்கிளில் சிறுமியை ஏற்றிவிட்டதாக தாயார் தெரிவித்திருந்தார். ஆனால் பலரும் அதனை நம்பவில்லை. வேறு யாரோ குழந்தை இல்லாதவர்களுக்கு தனது குழந்தையை அவர் பணத்துக்காக விற்றுவிட்டதாகவே ஊரவர்கள் பேசிக்கொண்டார்கள். ஆனால் ஒரு மாதம் கழித்து வயல் ஒன்றுக்குள் சிறுமியின் சிதைந்து போன உடலம் கிடைத்தது. அதன் பின்னர் சிறுமியை சைக்கிளில் ஏற்றிச் சென்ற சிறுவனே அவளை பாலியல் துஷ்பிரயோகத்தின் பின்னர் வயலில் கைவிட்டு வந்ததாகவும், பசியால் குழந்தை இறந்துள்ளதும் தெரியவந்தது.

இப்போது இன்னொரு கொலை. இந்தக் கொலை இடம்பெற்றது கம்பஹா, கொட்டதெனியாவில். இதன்போதும் காமப்பசிக்காக உயிரைத் தொலைத்தது 5 வயது சிறுமி ஒருத்திதான். வீட்டுக்குள் உறங்கிக் கொண்டிருந்த சிறுமியை விடிந்ததும் பார்த்தால் காணவில்லை,. பெற்றோர் கலங்கிப் போயினர். எங்கு தேடியும் கிடைக்கவில்லை.

கடைசியில் ஆற்றோரமாக அவளின் உடலம் கிடைத்தது. உயிரில்லாமல். துணியால் கழுத்து இறுக்கப்பட்டு அந்தச் சிறுமி கொலையுண்டிருந்தாள். அவள் பாலியல் இச்சைக்காக சிதைக்கப்பட்டிருந்தமை பார்த்தவுடனேயே தெரிந்தது.

இந்தக் கோரமான கொலையைப் பார்த்த தென்னிலங்கை கொந்தளித்தது. யாழ்ப்பாணத்தில் கூட சிறுமியின் கொலையைக் கண்டித்தும், கொலையாளிகளைக் கண்டுபிடிக்கக் கோரியும், இனியும் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் இடம்பெறாதிருக்கவும் ஒரு ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

இவ்வாறு நாடளாவிய ரீதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் அரசுக்கு அழுத்தத்தைக் கொடுத்தன.

கொலையாளியைத் தேடும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன. பல கோணங்களில் இந்தக் கொலை தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. முதலில் சிறுமியை அவளது தந்தையே கொலை செய்திருக்கலாம் என்று ஊகிக்கப்பட்டது. ஏனெனில் சில வருடங்களுக்கு முன்னர் பாலியல் வழக்கொன்றில் குறித்த சிறுமியின் தந்தை கைது செய்யப்பட்டு, அது தொடர்பான வழக்கும் நிலுவையில் உள்ளது. ஆயினும் பொலிஸார் அதிகம் சந்தேகப்பட்டது, சிறுமியின் அயல்வீட்டில் வசிக்கும் 17 வயது மாணவனைத்தான்.

அயல்வீடு என்பதால் சிறுமியின் வீட்டில் நடப்பவற்றை இலகுவாக அவதானித்து, தக்க சமயத்தில் உள்நுழைய முடியும். அவனும் அடிக்கடி சிறுமி மீது அன்பைப் பொழிந்துள்ளான். இந்தச் சந்தேகங்களின் அடிப்படையில்



அந்த மாணவனைக் கைது செய்து, அவனின் மடிக்கணினியை பொலிஸார் சோதனையிட்ட போது, இன்னொரு அதிர்ச்சி காத்திருந்தது. அவன் மடிக்கணினியில் ஆபாசப் படங்களும், வீடியோக்களும் நிறைந்து கிடந்தன. ஆக மொத்தத்தில் தாம் ஊகித்த விடயம் சரி என்ற முடிவுக்கே பொலிஸார் நினைத்தனர். ஆனால் மருத்துவ அறிக்கையும், தடயங்களும் 30 வயதுக்கு மேற்பட்ட ஒருவரே சிறுமியைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியதாக சொல்லி நின்றன. பொலிஸாருக்கு தலை சுற்றியது.

கடைசியில் பொலிஸாருக்கு இன்னொரு தகவல் கிட்டியது. நீண்டகாலமாக அந்த ஊருக்குள் நடமாடாமல் இருந்த கொண்டயா என்பவன், சிறுமி கொலை செய்யப்பட்ட தினத்தன்று மாலையில் அந்த ஊரில் தென்பட்டுள்ளான் என்பதுதான். கொண்டாயவிடம் சில விநோதப் பழக்க வழக்கங்கள் உண்டு. நீண்ட, அழுக்குப் படிந்த தலை முடியும், தோய்க்காத ஆடைகளும் அவனைப் பார்த்தாலே பயம் கொள்ள வைக்கும். அப்படிப்பட்ட கொண்டயா, சில சமயங்களில் ஊரில் உள்ள ஆற்றில் பெண்கள் குளிப்பதை மறைந்திருந்து பார்த்த போது மக்களிடம் மாட்டியுள்ளான்.

(22 ஆம் பக்கம் பார்க்க)




**“இது கொலைகளின் காலம் போலும். அதுவும் பெண்கள் வயது வேறுபாடின்றி, பாலியல் பசிக்காக வேட்டையாடப்பட்டுக் குதறப்படுகின்றார்கள்.”**

# நாம் உண்ணும் மரக்கறி வகைகள்



எமது உடல் நலத்தைப் பேணுவதில் மரக்கறிகளுக்கு அதிக பங்கு உண்டு. ஆனாலும் ஒரு சில காய்கறிகள் சிலரது உடலுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும் வகையில் குணநலன்களை கொண்டுள்ளது. அவை பற்றிக் கீழே காண்போம்.

### கத்தரிக்காய்

இதில் விட்டமின் 'சி', இரும்புச் சத்து போன்றவை உள்ளன.

ஆஸ்துமா நோயாளிகள் கத்தரிக்காயை மிளகு, சீரகம், பூண்டு சேர்த்து சமைத்துச் சாப்பிட உடல் சூட்டை தக்கவைக்கும். சரும நோயாளிகள், புண், ரணம் உள்ளவர்கள் இதனைச் சாப்பிடக்கூடாது. அதே போல் அரிப்பைத் தூண்டும் அறுவை சிகிச்சை செய்துள்ளவர்களும் முதல் மூன்று மாதங்கள் சாப்பிடக்கூடாது.

இதனைச் சாப்பிடுவதால் நரம்புகளுக்கு வலுவூட்டும். சளி, இருமலைக் குறைக்கும்.

### முருங்கைக்காய்

இதில் கொழுப்பு மற்றும் இரும்புச்சத்து மற்றும் விட்டமின் 'ஏ', 'சி' போன்றவை உள்ளன.

குழந்தைகள் முருங்கைக்காய் விதைகளை சாப்பிட்டால் மலக்குடல்களில் சேரும் கிருமி பூச்சிகள் வெளியேறும். முதியவர்கள், இதய நோயாளிகள், மூட்டு நோய் உள்ளவர்கள் இதனைச் சாப்பிடக் கூடாது. இது வாயுப்பிடிப்பை ஏற்படுத்தும்.

முருங்கைக்காய் சாப்பிட்டால் நரம்பு மண்டலங்களுக்கு ஊக்கம் தரும்.

### அவரைக்காய்

இதில் உயர்நிலைப் புரதம், இரும்பு, சுண்ணாம்புச் சத்து போன்றன அடங்கி உள்ளன.

நீரிழிவு, செரிமானத் தொல்லை, மலச் சிக்கல் உள்ளவர்களுக்கு இது கூடாது. இதனை இரவில் சேர்க்க வேண்டாம். அதில் நார்ச்சத்து அதிகம் என்பதால் ஜீரணம் ஆகாது.

அவரைக்காய் நிறைய உண்பதால் அது உடலுக்குத் தேவையான புரதச் சத்தினை அளிக்கும்.

### பீர்க்கங்காய்

நீர்ச்சத்து ,தாது உப்பு போன்றன இதில் அடங்கியுள்ளன.

இதை இரவில் யாரும் சாப்பிடக்கூடாது. அதே போல் சளி, இருமல், தலைவலி உள்ளவர்கள் ஒருபோதும் சாப்பிடக் கூடாது. தலையில் நீர்க் கோத்துக்கொள்ளும்.

இதனை நிறைய உண்டால் உடலுக்கு குளிர்ச்சியைத் தரும்.

### புடலங்காய்

உயர்நிலைப் புரதம், விட்டமின் 'ஏ', சுண் ணாம்புச்சத்து, கந்தகச்சத்து போன்றன அடங்கியுள்ளன.

மூலநோய் உள்ளவர்கள் இதனை அதிகமாகச் சேர்த்துக் கொள்ளலாம். ஆஸ்துமா, மூட்டுவலி, தலைவலி, சளி மற்றும் காய்ச்சல் உடம்பில் குத்தல், குடைச்சல் உள்ளவர்கள் இதனைச் சாப்பிடக்கூடாது.

### பாகற்காய்

பாகற்காயில் "பாலிபெப்டு டைட்" எனும் இன்சுலின் சுரப்பை அதிகப்படுத்தும் வேதிப் பொருள் நிறைந்துள்ளது.

இது சர்க்கரை நோயாளிகளுக்கு மிகவும் பயனுள்ளது. வேறு அலோபதி மருந்துகள் சாப்பிடும்போது இதனை சாப்பிடக் கூடாது. அவ்வாறு சாப்பிட்டால் மருந்தின் தன்மையை இது முறியடிக்கும்.

அதே போல் அடிக்கடி சாப்பிட்டால் ஆண்மைக் குறைவு ஏற்படும்.

அதே போல் தொற்று நோய்களை தடுக்க வல்லது. கிருமிகளை அழிக்கும். வயிற்றில் பூச்சிகள் சேராமல் தடுக்கும்.

### சுரைக்காய்

நீர்ச்சத்து, புரதம், சுண்ணாம்புச் சத்து போன்றன அடங்கியுள்ளன.

இது உடல் சூட்டைத் தணிக்கும். இதன் சுபாவம் குளிர்ச்சி. இது சிறுநீரைப் பெருக்கும். உடலை உரமாக்கும். மலச் சுத்தியாகும். தாகத்தை அடக்க வல்லது.

ஆனால் இது பித்த வாயுவை உண்டு பண்ணும். கடுஞ் சுரைக்காய் என்று ஒரு வகை உண்டு. இது குளுமை செய்வது. தாகத்தை அடக்கும். இதைப் பகலில் மட்டும் சாப்பிட வேண்டும். சளித் தொந்தரவு உள்ளவர்கள் சாப்பிடக் கூடாது.

அதே போல் இதனைச் சாப்பிட்டால் இதயத்துக்கு வலிமை சேர்க்கும். இரத்தத்தை வளப்படுத்தி, தாது பலம் சேர்க்கும். ஆண்மைச் சக்தியை ஊக்குவிக்கும். சீதளத்தையும், பித்தத்தையும் போக்கும். ஆனால் அஜீரணத்தை உண்டாக்கும். இதன் விதைகள் மேகத்தைப் போக்கும். வீரிய விருத்தியை ஏற்படுத்தும். இந்த விதைகளை சர்க்கரையுடன் சேர்த்து சில நாட்கள் உண்டு வந்தால் ஆண்மையைப் (இழந்தவர்கள்) பெறுவார்கள்.

(தொடரும்)

# கவிதைப்புனல்

## என் குழந்தை



என் வயிற்றில் உண்டான முதல்
கருவே!
உன்னை என்
வயிற்றுக்குள்ளேயே
அரவணைத்து,
உன் குறும்புகளை ரசித்து
மகிழ்ந்து, உன் மெல்லிய
அடிகளையும் உதைகளையும்
சுவைத்து,
உன்னை என் கையில்
ஈன்றெடுக்க களைத்து,
உன் ரோஜா இதழ்
முகத்தைப் பார்த்து,
என் வலிகளை எல்லாம் துடைத்து,
உன்னை என் விரல்கள்
தீண்டும் போது
நான் இந்த உலகையே மறந்து,
உன்னை என் மார்போடு கட்டி
அணைத்து,
உன் மென்மையான கன்னத்தில்
முத்தமிட்டு,
என் கண்ணே! மணியே! என்று
உன்னை நான் கொஞ்சிய நாட்கள்
இன்றும்
உன்னை ரசிக்க வைக்கிறது என்
கண்ணே!!!

- திவ்யா செல்வம்

## என் செய்தாய் நீ

உன் குரல் கேட்கும்
தருணங்களில் எல்லாம் – ஏனோ
தடுமாறித்தான் வார்த்தைகளை
வடிக்கிறது என் இதழ்கள்..

உன் குரல் ஓசை மட்டும்
நிசப்தமாய் ஒலிக்கிறது
என் உயிரினுள்...

காற்றை துளைத்து
இசை தரும் குழலைப் போல
என் உயிரைத் துளைத்து
வெளியேறுகிறது
உன் மௌனம் ....

உயிர் அமைதி கொண்டாலும்
மனதினுள் அலைகளாய் அடிக்கிறது
உன் நினைவுகள் ....

என் செய்தாய் எனை நீ !!!

- சஜன்யா

## பதிலொன்று கூறி விடு

தேவர் வீட்டு
மகளே நீ
தேநிலவுக்கு
அழைப்பது எப்போ
தேடுது என் மனது
உன்னையே
தேன் சுகம்
தருவது எப்போ..?

தங்கம் போல்
அவள் ஜொலிஜொலிக்க
தகரமாக என்னுள்ளம்
உரசிக் கொள்ளும்

வெள்ளைப் புறாக்களின்
பிறவியோ நீ
அன்னப் பறவையின்
அணி நடையோ நீ

வகுப்பில் நீ தேவதை
எனக்குத் தராத சோதனை
நம் காதல் ஜெயித்தால் சாதனை
மோதலில் பிரிந்தால் வேதனை

வே. வே. அகிலேஸ்வரன்,
மருதங்கேணியூர்



கணவரைப் பிரிந்த நயன்தாரா, கைக்குழந்தையுடன் தனது தோழி வீட்டில் வசித்து வருகிறார். சினிமாவில் நடிகையாக முயற்சியும் செய்து வருகிறார்.

இவரது தோழி ஒரு இயக்குநரிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்து வருகிறார். இவர்கள் எடுத்த ஒரு பேய் படத்தை திரையரங்கில் தனிமையில் அமர்ந்து பார்த்தால் ரூ.5 லட்சம் கொடுப்பதாக அறிவிப்பு வருகிறது.

பணக்கஷ்டம் காரணமாக அந்தப் பேய்ப் படத்தை தனியாகப் பார்க்க வருகிறார் நயன்தாரா. நயன்தாராவுக்கு முன் அந்த படத்தை பார்க்க வந்த ஒரு விநியோகஸ்தர் அரங்கிலேயே மர்மமான முறையில் கொல்லப்படுகிறார்.





# மிரட்டும் மாயா'

இருப்பினும், நயன்தாரா அந்த படத்தை பார்க்கிறார்.

அந்தப் படத்தில் ஆரி ஒரு பத்திரிகையில் ஓவியராகப் பணிபுரிந்து வருகிறார். இவருக்கு ஒருமுறை மாயா என்ற கதைக்கு ஓவியம் வரையும் பணி வருகிறது. அந்தக் கதையில் ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருக்கும் மாயவனம் காட்டில் 24 ஆண்டுகளுக்கு முன்பு மனநோயாளிகளை ஆராய்ச்சி என்ற பெயரில் கொடூரமாக கொன்று அங்கேயே புதைத்திருக்கிறார்கள்.

அவர்கள் செய்த ஆராய்ச்சியில் கைக்குழந்தையுடன் இருக்கும் மாயா என்ற பெண் பார்வையிழந்து, மாடியில் இருந்து குதித்து இறந்துவிடுகிறாள்.

அவளைப் புதைக்கும்போது, அவளது கையில் அணிந்திருந்த விலையுயர்ந்த வைர மோதிரத்தையும் சேர்த்து புதைத்து விடுகிறார்கள். இதை தேடிப்போகும் அனைவரும் மர்மமாக இறந்து போகிறார்கள்.

அதில், ஆரியும் நண்பரும் இறந்துபோகவே, அந்தக் காட்டுக்குள் என்னதான் இருக்கிறது என்பதைப் பார்க்க ஆரி செல்கிறார். ஆரி செல்லும்போது அந்த கதையில் படத்தை பார்த்துக் கொண்டிருக்கும் நயன்தாராவும் திரையில் தோன்றுகிறார். இதை பார்த்ததும் நயன்தாரா அதிர்ச்சியடைகிறார்.

அந்த படத்துக்கும், நயன்தாராவுக்கும் என்ன தொடர்பு? ஆரி என்ன ஆனார்? என்பதை திகிலுடன் முடித்திருக்கிறார்கள்.

நயன்தாரா மிகவும் அழுத்தமான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். படம் முழுக்க சோகம் வழிந்த முகத்துடனே வலம் வந்தாலும் இவருடைய நடிப்பு ரசிக்க வைக்கிறது. முன் பாதியைவிட இரண்டாம் பாதியில் இவருக்கு நடிப்பதற்கு நிறைய வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆரி மிகவும் இயல்பாக நடித்துள்ளார். ஆரியையும், நயன்தாராவையும் சுற்றியே பெரும்பாலான காட்சிகள் நகர்வதால், ரோபோ சங்கர், லட்சுமி பிரியா, ரேஷ்மிமேனன், கோபி ஆகியோர் வந்துபோவதே தெரியவில்லை. அதேசமயம், அவர்கள் கதாபாத்திரத்தை செவ்வனே செய்திருக்கிறார்கள்.

பேய்ப்படங்கள் என்றால், படத்தின் இடையிடையேதான் பயமுறுத்தும்படியான காட்சிகள் வைத்திருப்பார்கள். ஆனால், இந்தப் படத்தின் தலைப்பு தொடக்கம் கடைசி வரை முழுக்க முழுக்க ரசிகர்களைப் பயமுறுத்தும் வகையிலேயே காட்சிகளை அமைத்திருக்கிறார்கள்.

பேய் படங்கள் என்றாலே திகில் காட்சி அமைப்புகள்தான். எனவே, ஒளிப்பதிவாளருக்கு நிறைய வேலை. சத்யன் சூரியன் இரு கதைகளுக்கும் நிறைய வேறுபாடுகளை கொடுத்திருக்கிறார்.

திகில் கதைக்கு தேவை இருள்தான். ஆனால் படம் முழுக்க முழு இருட்டு + கருப்பு வெள்ளை காட்சிகள்.. படம் மிக மிக மெதுவாக நகர்வதால் பார்வையாளர்கள் அமைதியை இழந்து விடுகின்றனர்.

பேய் பட வரிசையில் வந்திருக்கும் மற்றொரு படம் என்று கூறிவிட முடியாது. இரண்டு கதைகளை பிடித்து ஒரு முடிச்சில் சேர்த்திருக்கிறார் இயக்குநர் அஸ்வின் சரவணன். ஒருவேளை நயன்தாரா போன்றொரு மாஸ் ஹீரோயின் தேவை என்று இவரை பிடித்தாரா எனத் தெரியவில்லை. நாயகி ஒரு சில வார்த்தைகளை மட்டுமே பேசுகிறார். ஒரு மாறுபட்ட கதையை எடுத்ததற்காக பாராட்டலாம்.

## சர்க்கரை நோயா...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உடல் எடை 10 சதவிகிதம் குறைவாக இருப்பது நல்லது. அதாவது 63 கிலோ கிராம் இருந்தால் நல்லது. சர்க்கரை நோயாளிகள் சமச்சீரான உணவில் தினமும் கவனம் செலுத்துவது அவசியம். புரதம், கார்போஹைட்ரேட், குறைந்த அளவு கொழுப்பு, வைட்டமின்கள் ஆகியவை போதுமான அளவுக்கு தினமும் உணவில் சேருவதே சமச்சீரான உணவு என சொல்லப்படுகிறது.

**தானிய வகைகள்**

கோதுமை, கேழ்வரகு, கம்பு போன்ற தானிய வகைகள் அரிசியை விட நல்லது. கோதுமையில் புரதச் சத்து அதிகம். மேலும் இத்தானிய வகைகளில் கூடுதல் நார்ச்சத்தை கார்போஹைட்ரேட் கொண்டுள்ளதால் உணவு மெதுவாக ஜீரணம் ஆகும். இது சர்க்கரை நோயாளிகளுக்கு நல்லது.

**அரிசி**

சர்க்கரை நோயாளிகள் அரிசியே சாப்பிடாமல் கோதுமையால் செய்யப்பட்ட உணவுதான் சாப்பிட வேண்டும் என்ற கருத்து தவறானதாகும். அரிசி, கோதுமை, கேழ்வரகு ஆகிய அனைத்திலும் 70 சதவிகித மாச் சத்து அடங்கியுள்ளது. எனவே எந்தத் தானியமாக இருந்தாலும் சரியான அளவில் சாப்பிடுவது என்பது அவசியமாகும்.

**பருப்பு வகைகள்**

உளுந்தம் பருப்பு, கடலைப் பருப்பு, மைசூர் பருப்பு ஆகியவற்றிலும் பயறு வகைகளிலும் புரதச் சத்து அதிகம். 25 கிராம் பருப்பில் 100 கிராம் கலோரி கிடைக்கும். 100 கிலோ கலோரியில் கார்போஹைட்ரேட் 15 சதவிகிதம், புரதச்சத்து 6 சதவிகிதம் இருக்கும். கொழுப்புச் சத்து 1 கிராம் மட்டுமே இருக்கும். எனவே பருப்புகளை சமைத்தோ, முளை கட்டிய பயறு வகைகளையோ தினமும் உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

**காளான்**

காளான்களில் புரதச் சத்து அதிகமாகவும், கலோரி குறைவாகவும் உள்ளது. எனவே சர்க்கரை நோயாளிகளுக்கு காளான் மிகவும் ஏற்ற உணவாகும்.

**காய்கறிகள்**

சர்க்கரை நோயாளிகளின் தினசரி உணவில் மிக முக்கியமான இடம் காய்கறிகளுக்கு உண்டு. ஏனெனில் குறைந்த கலோரியில் அதிக ஆற்றலை பெரும்பாலான காய்கறிகள் தரக் கூடியவை.

**மோர்**

ஆடை நீக்கிய மோர், சர்க்கரை சேர்க்காத எலுமிச்சை மற்றும் தக்காளி ஜூஸ், தெளிந்த சூப், மிளகு ரசம், தக்காளி, வெள்ளரிக் காய், வெங்காயம், வெள்ளை முள்ளங்கி, குடை மிளகாய் ஆகிய காய்கறி சாலட் வகைகளை எவ்வளவு வேண்டுமானாலும் சர்க்கரை நோயாளிகள் சாப்பிடலாம்.

சர்க்கரை நோயாளிகள் அளவோடு சாப்பிட வேண்டிய காய்கறிகள் : கரட், பீட்ரூட், பட்டாணி, போஞ்சி ஆகியவை.

**தவிர்க்க வேண்டியவை**

உருளைக் கிழங்கு, சேனைக் கிழங்கு, சேப்பங் கிழங்கு, வள்ளிக்கிழங்கு ஆகியவற்றை சர்க்கரை நோயாளிகள் தவிர்ப்பது நல்லது. சர்க்கரை தேன், குளுக்கோஸ், ஜாம், வெல்லம், இனிப்பு வகைகள், பிஸ்கட்டுகள், கேக், இளநீர், தேங்காய், குளிர் பானங்கள், மதுபான வகைகள், குறிப்பிட்ட சத்துக்கான மா வகைகள் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். அனைத்து வகையான பிஸ்கட்டுகளையும் சர்க்கரை நோயாளிகள் தவிர்க்க வேண்டும்.

நன்றி : நர்கிஸ்

இவ்வார

# இராசி பலன்

30.09.2015 –06.10.2015

**மேஷம்**

### அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

குடும்பத் தேவையை நிறைவேற்ற, தாராள அளவில் பண வரவு கிடைக்கும். மனதில் உத்வேகமும், செயல்களில் பரிமளிப்பும் உருவாகும். எதிர்ப்பு விலகி, முன்னேற்றப் பாதை எதுவென புலப்படும். உடன் பிறந்தவர்களின் உதவி உண்டு. வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரர் மனதில் நம்பிக்கை வளர, இதமாக அறிவுரை சொல்வீர்கள். இல்லறத் துணையிடம், கருத்து வேறுபாடு வராத அளவில் அன்பு பாராட்டுங்கள். தொழிலில் உருவாகிற வளர்ச்சியை கவனமுடன் பாதுகாக்கவும். பணியாளர்களுக்கு, ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்கள், கணவரின் வாழ்வியல் சூழ்நிலையை உணர்ந்து நடந்து கொள்ளவும். மாணவர்கள், ஆசிரியர் வாழ்த்தும் வகையில் படிப்பில் கவனம் கொள்வீர்கள்.

**ரிஷபம்**

### கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

அரசு தொடர்பான அனுகூலம் பெறுவதில் தாமதம் இருக்கும். புத்திரரின் சேர்க்கை, சகவாசம் உணர்ந்து, அவர்கள் நல்வழியில் செயல்பட உதவுங்கள். விருந்து, விழாவில் கலந்து கொள்ள அழைப்பு வரும். இல்லறத் துணை, உங்களின் நல்ல குணம் பற்றி உறவினர்களிடம் சொல்லி பெருமிதம் கொள்வார். கூடுதல் உழைப்பினால் தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைய முடியும். பணியாளர்கள், அதிக பொறுப்பு உணர்வுடன் பணிபுரிய வேண்டும். பெண்கள், குடும்பத்தின் முக்கிய தேவைக்கு மட்டும் பணம் செலவு செய்வது நல்லது. மாணவர்கள், உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவை உண்ண வேண்டாம்.

**மிதுனம்**

### மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

உடல் நலம் ஆரோக்கியம் பெற்று, பணிகளில் ஆர்வம் கொள்வீர்கள். பண வரவு திருப்திகரமான அளவில் கிடைக்கும். வீடு, புதிய வாகனம் வாங்க சிலருக்கு யோகம் உண்டு. புத்திரர், பெற்றோர், சான்றோர்களின் கருத்துகளை ஏற்று செயல்படுவர். வழக்கு விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்கும். இல்லறத் துணை, கருத்து ஒற்றுமையுடன் குடும்ப நலம் பேணுவார். தொழிலில் அபிவிருத்தி பணியை திட்டமிட்டபடி நிறைவேற்றலாம். பணியாளர்கள், கூடுதல் வேலைவாய்ப்பை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வீர்கள். பெண்கள், கணவரின் கூடுதல் அன்பு, பாசம் கிடைத்து சந்தோஷ வாழ்வு பெறுவர். மாணவர்கள், புதிய பயிற்சியினால் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

**கடகம்**

### புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

உடன் பிறந்தவர்களின் வாழ்க்கை முன்னேற்றம் பெற உதவுவீர் கள். எதிர்வரும் சிரம சூழலை மதிநுட்பத்துடன் சரி செய்வீர்கள். இல்லறத் துணையின் உடல் நலம் சீராக, மருத்துவ சிகிச்சை உதவும். தொழில், வியாபாரத்தில் புதியவர்களின் வருகை, மாறுபட்ட தன்மையை எதிர்கொள்ள வைக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்ட திட்டத்தை தவறாமல் பின்பற்ற வேண்டும். பெண்கள், கணவரின் பேச்சு, செயலில் குறை காணும் சிந்தனையை தவிர்க்கவும். மாணவர்கள், அதிக பயன் தராத பொருளை வாங்குவதில் ஆர்வம் வேண்டாம்.

**சிம்மம்**

### மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

சுயகௌரவம் பாதுகாப்பதற்காக, அதிக பணம் செலவு செய்கிற நிலையை தவிர்ப்பதால் சிரமம் விலகும். அளவான உழைப்பு, சீரான ஓய்வு, உடல் நல ஆரோக்கியத்தை பாதுகாக்கும். வெளியூர் பயணத்தில் கூடுதல் பாதுகாப்பை பின்பற்ற வேண்டும். புத்திரர், தம் தேவை நிறைவேற தாமதம் ஆவதால் வருத்தம் கொள்வர். இல்லறத் துணை, பணிகளில் சில குளறுபடிகளை எதிர்கொள்வார். தொழிலில் உருவாகிற மந்த நிலையை மாற்ற, உங்கள் நலம் விரும்புபவரின் ஆலோசனை உதவும்.

**கன்னி**

### உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்

இளைய சகோதரர் உதவி, ஆலோசனை வழங்குவர். புத்திரர் விரும்பிய பொருளை, தாராள பணச் செலவில் வாங்கித் தருவீர்கள். விவகாரங்களில் அனுகூலத் தீர்வு கிடைக்கும். இல்லறத் துணை, கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற புதிய வாய்ப்பு வரும். பணியாளர்கள், தன் கடமையை உணர்ந்து பணிபுரிவீர்கள். மாணவர்கள், புதியவர்களை நண்பராக ஏற்பதில் உரிய கவனம் வேண்டும்.

**துலாம்**

### சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

நிம்மதி நிறைந்த வாழ்க்கை முறை உருவாகும். சமூகப் பணியிலும் ஈடுபாடு கொள்வீர்கள். புத்திரரின் உடல் நலம் ஆரோக்கியம் பெற, சத்தான உணவை உண்ணத் தருவீர்கள். எதிர்ப்பாளர், உங்களின் நல்ல செயல்களை வியப்புடன் கவனிப்பர். இல்லறத் துணை வழிசார்ந்த உறவினர்களால் உதவி உண்டு. தொழில், வியாபாரத்தில் புதிய மாற்றம் கொண்டு வர முயற்சி மேற்கொள்வீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்தின் வழிகாட்டுதலை பின்பற்றி நற்பெயர் பெறுவீர்கள். மாணவர்களின் படிப்புக்கான பண வசதி, திருப்திகரமான அளவில் கிடைக்கும்.

**விருச்சிகம்**

### விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

மனம், செயலில் உற்சாகம் அதிகரிக்கும். நல்லோரின் ஆதரவு கிடைத்து, பல நாள் திட்டமிட்ட செயலை நிறைவேற்றுவீர்கள். நீண்ட தூர வாகன பயணம், பயன் அறிந்து மேற்கொள்ளவும். புத்திரரின் சந்தேகத்தை நிவர்த்தி செய்வதில் முக்கிய கவனம் கொள்வீர்கள். விவகாரங்களில் விலகுவதால் பணச் செலவு, கால விரயம் வராமல் தவிர்க்கலாம். இல்லறத் துணை, குடும்ப ஒற்றுமையை பாதுகாத்திடுவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை உருவாகும். உத்தியோகஸ்தர்கள், பணியாளர்களுக்கு ஊக்கம் தந்து பணி இலக்கு நிறைவேற்றுவர். பெண்கள், இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். மாணவர்கள், சாகச விளையாட்டில் ஈடுபடக் கூடாது.

**தனுசு**

### மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

எதிர்ப்பு விலகி, வாழ்வில் முன்னேற்றம் பெற புதிய வாய்ப்புகளை பெற்றுத் தரும். இஷ்ட தெய்வ அருள் பலம் துணை நிற்கும். ஆன்மிக நம்பிக்கை உள்ளவர்களின் அறிமுகம், உதவி கிடைக்கும். குடும்ப உறுப்பினர், ஒற்றுமை எண்ணங்களுடன் செயல்படுவர். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், திருப்திகர பணவரவும் கிடைக்கும். இல்லறத் துணை, உங்களை புகழ் மிக்கவராக உருவாக்குவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை அளவுடன் இருக்கும். பணியாளர்கள், பணியின் தரம் குறித்து அதிப்தியாக பேசுபவரிடம் விலகுவது நல்லது. மாணவர்கள், வெளியிடம் சுற்றுவதை குறைக்கவும்.

**மகரம்**

### உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்,திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்

முக்கியஸ்தரின் அன்பு, உதவி கிடைக்கும். தெய்வ வழிபாடுகளில் ஆர்வம் கொள்வீர்கள். குடும்பத்தில் மங்கள நிகழ்வு ஏற்படும். . புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். பணி சார்ந்த வெளியூர் பயணம் ஏற்படலாம். இல்லறத் துணை, கருத்து ஒற்றுமையுடன் குடும்ப நலம் பேணுவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து உபரி பண வரவு கிடைக்கும். பணியாளர்கள், சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவீர்கள். பெண் களுக்கு, தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள், பிறர் பொருளை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க கூடாது.

**கும்பம்**

### அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்

அரசு சார்ந்த அனுகூலம் பெற உதவி உண்டு. உறவினர் குடும்ப விவகாரங்களில் சமரசம் பேச வருகிற அழைப்பை தவிர்க்கவும். பூர்வ சொத்தில் இருந்த இடையூறு விலகும். புத்திரர், உங்கள் சொல் கேட்டு நடந்து கொள்ள முயற்சிப்பர். சத்து நிறைந்த உணவு, சீரான ஓய்வு, உடல் நலம் காக்க உதவும். இல்லறத் துணை விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை கவனமுடன் பாதுகாக்கவும். பணியாளர்கள், பொறாமை குணம் உள்ளவர்களிடம் சொந்த விசயம் பேச வேண்டாம். பெண்கள், நகை இரவல் கொடுக்க, வாங்கக் கூடாது. மாணவர்கள், படிப்பில் சிறப்பு பெற சிலரது உதவி கிடைக்கும்.

**மீனம்**

### பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

. தாமதமான பணியை நிறைவேற்ற, அதிர்ஷ்டகர வாய்ப்பு கிடைக்கும். தம்பி, தங்கைக்கு மங்கள நிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை திருப்திகரமாகும். வீடு, வாகனத்தில் அபிவிருத்தி பணி மேற்கொள்ளலாம். புத்திரரின் சொல்லும், செயலும் சிறப்பாக அமைந்து பெருமை தேடித் தரும். இல்லறத் துணை, உங்களின் நல்ல குணம் பாராட்டுவார். புதியவர்களின் வரவேற்பு கிடைத்து தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி காண்பீர்கள். மாணவர்கள், மகிழ்ச்சிகர மனதுடன் படித்து, நல்ல தேர்ச்சி விகிதம் பெறுவர்.

# சுதந்திர வேட்கை

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 105

● அடேல் பாலசிங்கம்



இப்பொழுது யாழ்ப்பாணத்திலே மிக முரணபாடான ஒரு சூழலிலே அதுவும் திலீபனின் உயிர் ஒடுங்கிக் கொண்டிருக்கும் கால கட்டத்தில் அவரைச் சந்திப்பது , பாலாவுக்கு ஆற்றொணரத் துயர் தரும் ஒரு சந்திப்பாக இருந்தது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் வாளாகத்துக்குள் நாம் சென்ற போது சன சமுத்திரமே எம்மை எதிர் கொண்டது. எரிக்கும் வெய்யிலில் வெள்ளை மணலில் மக்கள் திரள் அமர்ந்திருந்தது. ஒன்று திரண்டு பொங்கும் உணர்வு காற்றில் கனத்தது. ஒரு தெய்வீகத் தன்மையைஅந்தச் சூழல் பிறப்பித்தது. தனது மக்களின் அரசியல் உணர்வுகளையும் , வேணவாக்களையும் ஒன்று திரட்டிய உருவினனாக மேடையிலே தளர்வுற்றுக் கிடந்த அந்த இளைஞன் காணப்பட்டான். திலீபனுடைய உண்ணாவிரதம் மேலும் ஒன்றைச் சாதித்திருந்தது. தமிழ் இனத்தின் ஆன்மாவையே அது தொட்டிருந்தது. பொது மக்களின் ஒன்று திரண்ட ஆதரவையும் அது பெற்றிருந்தது. ஒடிந்து விழக்கூடிய அந்த இளைஞனின் ஒப்பற்ற தியாகம் அவனுடைய மக்களின் கூட்டப் பலம் என்ற மகா சக்தியாக வடிவெடுத்திருந்தது. திலீபனின் உண்ணாவிரதப் போராட்டமானது ஒரு பொது நலனுக்காக தனியொருவன் தன்னை உதிர்க்கும் ஒப்பற்ற தியாகம். மற்றவர்கள் சுதந்திரமாகவும் கண்ணியத்தோடும் வாழ வேண்டும் என்பதற்காக வீரம் மிக்க ஓர் இளைஞன் தனக்குத் தானே மரணதண்டனை வழங்கும் உயர் கொடை தன்னைத் தானே சிலுவையில் அறைந்த ஒப்பற்ற அர்ப்பணிப்பு. ஆழ்ந்த மரியாதையோடும் பணிவோடும் பாலாவும் நானும் மேடை மீது ஏறி , உறை நிலையிலிருந்த திலீபனுடன் பேசச் சென்றோம். ஏற்கனவே பல நாள்களாக நீரோ, உணவோ ஏற்காததால் , உலர்ந்த வெடித்த உதடுகளோடு காணப்பட்ட திலீபனால் முணுமுணுக்கவே முடிந்தது. களையிழந்த திலீபனுடன் பேச பாலா குனிந்தார். ஓரிரு வார்த்தைகள் பேசினார்கள். எதிர்பார்த்தது போல, அரசியல் நிலைவரம் பற்றியே தீலிபன் விசாரித்தான். விரைவிலேயே அங்கிருந்து அகன்றோம். அதன் பின் அந்த உன்னதத் தியாகியை நாம் உயிரோடு பார்க்கவில்லை.



(பதிவு தொடரும்)



# காதல் முறிந்த பின்பு தான் சந்தோசமாக இருக்க வேண்டும்

ஒரு காதல்/உறவில் தோல்வி காண்பது என்பது பொதுவான விஷயமே. அப்படி தோற்று விட்டதால் உங்கள் வாழ்க்கை நின்று விடப்போகிறதா என்ன? தோற்று போவதால் ஒன்றும் தவறில்லை. உங்கள் தவறிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டியது தான் முக்கியமான விஷயம். அப்போது தான் வாழ்க்கையில் அடுத்த அடியை எடுத்து வைக்க முடியும்.

ஆனால் அதே நேரம், நாம் ஏன் நம் உறவில் தோல்வி அடைகிறோம் என்பதை உணர்ந்து கொள் வது நல்லதே. நீங்கள் திரும்பிப் பார்க்கையில், உங்கள் குணத்தில் ஏதேனும் திருத்தங்கள் செய்ய வேண்டி யிருந்தால், துணிந்து அதைச் செய்யுங்கள். இதனால் வருங்காலத்தில் உறவுகள் தோல்வி அடைவது தவிர்க்கப்படும்.

வலி, காயம் மற்றும் மன அழுத்தம் போன்றவைகள் எல்லாம் ஒரு உறவு முறிந்த பின் ஏற்படக்கூடிய பொதுவான எதிர்வினைகள். ஆனால் சிறிது காலம் கடந்து சென்றால், மீண்டும் சந்தோஷத்தை கொண்டு வருவது நல்லது. ஏன் நம் உறவுகள் தோல்வியில் முடிகிறது? எந்த ஒரு விஷயமாக இருந்தாலும் சரி, அதற்கு பின்னணியில் ஒரு வலுவான காரணம் இருக்கும். அதேபோல், ஒரு உறவு முறிந்த பிறகு, மீண்டும் சந்தோஷ உணர்வை பெறுவதற்கும் சில காரணங்கள் உள்ளன. அவற்றைப் பற்றி பார்க்கலாமா?

**புதிதாக ஆரம்பிக்கலாம்**

ஒரு புதிய துணையுடன் மறுபடியும் அனைத்தையும் முதலில் இருந்து தொடங்க பழைய உறவின் முறிவு ஒரு நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் என்பதை மறந்துவிடாதீர்கள். உங்களுக்கு சில அனுபவங்கள் இருப்பதால் இந்த முறை குறைவான தவறுகளை மட்டுமே நீங்கள் செய்யலாம் தானே!

**பாடம் கற்றுக் கொள்ளலாம்**

ஆம், நீங்கள் செய்த தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொள்ள இதனை ஒரு வாய்ப்பாக கருதிக் கொள்ளவும். உங்களின் வருங்கால உறவில், இத்தவறுகளை மீண்டும் இழைக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**புதிய உறவை மகிழ்ச்சியாக்கலாம்**

பொதுவாக பழைய உறவுகளில் இருந்து அனுபவம் பெற்றவர்கள் வருங்காலு உறவுகளில் நன்றாக ஈடுபடுவார்கள் என உறவுகள் வல்லுனர்கள் கூறுகிறார்கள். அதற்குக் காரணம் அவர்களுடைய அதீத கவனம்.

**நீங்கள் திடமாவீர்கள்**

கண்டிப்பாக, உறவு முறிவு மற்றும் தனிமையின் வலியை மீண்டு வந்த பின், நீங்கள் இன்னமும் திடமாவீர்கள். இதனால் வாழ்க்கையில் பல ஏற்ற இறக்கங்களை, பல வகையான நபர்களை சமாளிக்கும் திறனைப் பெறுவீர்கள்.

**சிறந்த தேர்வுகளை மேற்கொள்ளலாம்**

ஓர் உறவு முறிந்த பிறகு, நீங்கள் தவறான தேர்வுகள் மேற்கொள்ளும் வாய்ப்புகள் பெரியளவில் குறையும். மோசமான அனுபவத்திற்கு பிறகு அடுத்த அடியை மிக கவனமாக எடுத்து வைப்பீர்கள்.

**மெய்மறக்காமல் இருக்கலாம்**

மிக வசீகரமான துணையை நீங்கள் கண்டாலும் கூட, அவர்கள் உங்களை கவர உங்களுக்கு சொர்க்கத்தை காட்டுவதாக ஆசை காட்டினாலும் கூட, நீங்கள் அவ்வளவு சுலபத்தில் அவர்கள் வலையில் விழுந்த விட மாட்டீர்கள்.

**மாறுவதற்கு கற்றுக் கொள்வீர்கள்**

கற்றுக் கொள்ள வேண்டிய மிக முக்கியமான பண்பு இது. நம்மை சுற்றியுள்ளவர்களிடம் வளையத்தக்க வகையில் நடந்து கொள்ள நாம் அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டும். முறிந்து போன உறவுகள் தான் இந்த பண்புகளை கற்றுத் தரும்.

**உயர பறக்கமாட்டீர்கள்**

சில உறவுகள் தோல்வி அடைவதால் நாம் வானில் பறப்பது குறையத் தொடங்கும். வானத்தில் மிதக்கும் உணர்வு ஆரோக்கியமற்றது. சிறந்த உறவுகளைப் பற்றி கனவு காண்பது யதார்த்தம் அல்ல. அதனால் தரையில் கால் வைத்து நடப்பதே பாதுகாப்பானது.

வலி, காயம் மற்றும் மன அழுத்தம் போன்றவைகள் எல்லாம் ஒரு உறவு முறிந்த பின் ஏற்படக்கூடிய பொதுவான எதிர்வினைகள். ஆனால் சிறிது காலம் கடந்து சென்றால், மீண்டும் சந்தோஷத்தை கொண்டு வருவது நல்லது. ஏன் நம் உறவுகள் தோல்வியில் முடிகிறது? எந்த ஒரு விஷயமாக இருந்தாலும் சரி, அதற்கு பின்னணியில் ஒரு வலுவான காரணம் இருக்கும்.



# பிரிந்திருக்கும் காதல் விலைமதிப்பில்லாதது

பிரிவு இல்லை என்றால் காதலில் சுவாரசியம் இருக்காது.

அதாவது, ஒருவரையொருவர் மனதார காதலிக்கும்போது, இடையில் சிறு பிரிவிவைச் சந்தித்தால் அந்த பிரிவானது அவர்களுக்கு துன்பத்தை ஏற்படுத்துவதை விட, அதிகளவு இன்பத்தையே ஏற்படுத்தும்.

காதலர்கள் ஒன்றாக இருக்கும்போது ஒருவரையொருவர் அதிகம் புரிந்துகொள்வதை விட, பிரிந்து இருக்கும்போது பல மடங்கு அறிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது.

ஒன்றாக இருக்கும் போது, நாம் பல சமயங்களில் திட்டமிடுதலைப் பற்றி யோசிப்பதே இல்லை.

ஆனால் தூரம் தள்ளி இருக்கும் போது, நம் வாழ்க்கையிலும், எதிர்காலம் பற்றிய பயம் நமக்கு திட்டமிடுதலின் முக்கியத்துவத்தை உணர்த்தும். இத்தகைய பயம் நல்லதே ஆகும்.

காதலியை பிரிந்திருக்கும்போது, அவள் பெயரை மற்றொரு இடத்தில் கேட்டாலே மனதில் ஒருவித படபடப்பான இன்பம் வந்துபோகும்.

தொலைதூர காதலில் நீங்கள் உபயோகப்படுத்தும் ஒவ்வொரு வார்த்தைகளிலும் காதலும், அக்கறையும் அன்பும் மட்டுமே எதிரொலிக்கும்.

அதனால், இங்கு சண்டை சச்சரவுகளுக்கு இடம் இருக்காது.

தினம் தினம் சந்தித்து காதலை வெளிப்படுத்தும்போது காதலும், காதலியும் அழகாகத் தெரிவாள், ஆனால் பிரிவில் இருக்கும்போது காதல் மட்டுமே அழகாகத் தெரியும்.

பல நாட்கள் பிரிந்திருந்து விட்டு, பின்னர் சந்தித்து நாம் வெளிப்படுத்தும் அன்புக்கு விலைமதிப்பில்லை.

பொருளாதார பெருமந்தம் சர்வதேசத்தையே முடக்கிப் போட்டிருந்த 1930கள் பிரிட்டன் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளின் தொழிற்சாலைகளில் வேலை கிடைப்பதே குதிரைக் கொம்பு. அப்படியே கிடைத்தாலும் சம்பளம் வாங்குவதற்குள் உன்னைப் பிடி என்னைப்பிடி என்றாகிவிடும். ரொட்டி என்பது ஏழை மக்களுக்குமிகக் விலை உயர்ந்த உணவு .

அந்த சூழலில், எவ்வளவு வேலைச்சுமையாக இருந்தாலும் அதை செய்தே தீர வேண்டிய கட்டாயம் தொழிலாளர்களுக்கு.

இன்னொரு பக்கம் வேலைப்பகுப்பு முறையின் கொடுமை. வேலைப் பகுப்பு முறை என்பது, ஒருவருக்கு எந்த வேலை சரியாகச் செய்யத் தெரிகிறதோ அதை மட்டுமே தொடர்ந்து செய்வது.. உதாரணம், திருகாணியின் சுரையைத் திருகுவதுதான் ஒருவருக்கு சரியாக வரும் என்றால், தொடர்ந்து அதே வேலையைச் செய்வது..

இந்தச் சமூக அவலங்களை, அவை நடக்கும் காலகட்டத்திலேயே ஒரு சினிமா மூலம் நச்சென்று சொல்ல வேண்டும். ஆனால் ஆவணப்படம் மாதிரி சொல்லிக் கொண்டிருந்தால் யார் பார்ப்பார்கள்

ஆனால் பார்க்க வைத்தார் ஒருவர். அவர்தான் சார்லி சாப்ளின்..

படம்: 'மாடர்ன் டைம்ஸ்'!

உலகின் மிகச் சிறந்த புரட்சிகரமான படம் என்று கூட இதைச் சொல்லலாம்.

வசனங்கள் இல்லை, அதிரடி சண்டை, 'கிராபிக்ஸ்', அட குறைந்த பட்சம் 'ரொமான்ஸ்' கூடக் கிடையாது. ஆனால் பார்ப்போரின் இதயங்களை வசப்படுத்தும் நையாண்டி, உணர்வுகள், அரசியல் எள்ளல் என புதிய கலவையாக இருந்தது அந்தப்படம்.

குறிப்பாக, நேரத்தை மிச்சப்படுத்த சாப்பாடு ஊட்டிவிடும் ஒரு கருவியைக் கண்டுபிடிப்பதாக வரும் காட்சி எள்ளலின் உச்சம்!

**சாப்ளின் சில குறிப்புகள்**

சார்லி சாப்ளின் என்ற திரைக்கலை மேதை மீது விவரம் தெரிந்த நாள் முதல் நேசம் கலந்த மரியாதை உண்டு. கலைவாணர், புரட்சித் தலைவர் படங்களை விரும்பிப் பார்ப்பது போலவே, சார்லி சாப்ளினின் படங்கள் எங்கே ஓடினாலும் தேடிப் போய்ப் பார்த்துவிடுவேன்.

அந்த அற்புத கலைஞனைப் பற்றி சில வரிகளுக்குள் சொல்வது சாத்தியமான விஷயமே அல்ல.

எல்லோரும் சினிமாவை எப்படி தங்களை முன்னிலைப்படுத்த மட்டுமே கையாளலாம் என யோசித்துக் கொண்டிருந்த அன்றைய காலகட்டத்தில், சாப்ளின் மட்டுமே சினிமாவை சமூக விழிப்புணர்வுக்கான கருவியாக மாற்றினார்.

பிரிட்டன் தலைநகர் லண்டனின் தெற்குப் பகுதியில் ஒரு ஏழை மேடைப் பாடகனின் மகனாக 1889இல் பிறந்தவர் சாப்ளின். 5 வயதிலேயே நாடக மேடைகளுக்கு அவர் நன்கு அறிமுகமாகிவிட்டார். தான் பெற்ற அனுபவங்களைத்தான் பின்னாளில் திரைப்படங்களில் வெகு யதார்த்தமாகக் காட்டினார்.

பெரிதாக படிப்பறிவில்லை. 21 வயது வரை வறுமையுடன் போராடிய அந்த கலைஞன், பின்னர் அமெரிக்காவுக்குப் பயணமானார். 1913இல் ஊமைப் படங்களில் தலைகாட்ட ஆரம்பித்தார். அவர் ஆரம்பத்தில் போட்டது வில்லன் வேஷம். வில்லனாக இருந்து 'சூப்பர் ஸ்டாராக' உயர்வது சாப்ளின் காலத்திலிருந்தே தொடர்கிறது போலும்!

இரண்டாவது படத்திலேயே நகைச்சுவையைத் தனது பிரதான அஸ்த்திரமாக்கிக் கொண்டார். 'கிட் ஆட்டோ ரேசஸ் அட் வெனிஸ்' என்ற அந்தப் படத்தில்தான் தொள தொளு கால் சட்டை, சிறிய கோட்டு, ஹிட்லர் மீசை, சின்னத்தொப்பி, கையில் சிறு தடி என தன்து 'ட்ரேட் மார்க்' வேடத்துக்கு மாறினார்.

அதன்பிறகு ஒரே ஆண்டில் 35 படங்களில் நடிக்கும் சூப்பர் நடிகராக மாறிவிட்டார் சாப்ளின். இவை அனைத்துமே கிட்டத்தட்ட வெற்றிப் படங்கள்தான். 1916ஆம் ஆண்டில் சாப்ளின் வாங்கிய சம்பளம் வாரம் 10000 டொலர்கள்!

இன்னொன்று அன்றைக்கே, குறும்படம், இரண்டு ரீல் சினிமா என பெரிய திரைப் புரட்சியே நடத்திக் காட்டியவர் சாப்ளின்.

நடிகராக இருந்தவர் பின்னர் இயக்குநராகவும் உயர்ந்தார்.

1919இல் 'யுனைட்ட் ஆர்ட்டிஸ்ட்ஸ்' நிறுவனத்தைத் தொடங்கினார், நண்பர்களுடன் இணைந்து. இந்த நிறுவனத்தால் வெளிவந்த படம்தான் 'சிட்டி லைட்ஸ்' (1931).

மௌனப் படங்களுக்கு வரவேற்புக் குறைந்து, பேசும் படங்கள் வரத் தொடங்கியிருந்த காலகட்டத்தில்தான் (1936) இந்த 'மாடர்ன் டைம்ஸ்' வெளியானது. இந்தப்படத்தில் மற்றவர்கள் பேசினாலும், சாப்ளின் பேசவே மாட்டார். ஆனால் சரித்திரத்தில் பேச வைத்தார் அந்தப் படத்தை.

சாப்ளின் சாதனைகளுக்கு சிகரம் என்றால், சர்வாதிகாரி ஹிட்லரைக் கிண்டலடித்து அவர் தயாரித்து இயக்கி 1940ஆம் ஆண்டு வெளியான 'த கிரேட் டிக்டேட்டர்'. இந்தப் படத்தில்தான் முதல்முதலில் அவர் வசனம் பேசினார்.

ஹிட்லர் சர்வ பலம் மிக்க சர்வாதிகாரியாக கோலோச்சிக் கொண்டிருந்த காலகட்டத்தில் வெளியான படம் இது என்பதிலிருந்தே, சாப்ளின் என்ற கலைஞனின் ஆளுமை என்ன என்பது புரிந்திருக்கும்.




உலகம் முழுவதும் இந்தப்படம் திரையிடப்பட்டு, பெரும் பரபரப்பை உண்டாக்கியது. 1952இல் அவர் 'லைம் லைட்' என்ற படத்தில், 'சீரியசான' வேடத்தில் நடித்தார்.

அவரது கடைசி படம் A Countess from Honk Kong (1967). நடித்தவர்கள் மார்லன் பிராண்டோ சோபியா லாரன். இந்தப் படத்தில் ஒரு சிறிய வேடத்தில் தோன்றுவார் சாப்ளின். அதுதான் அவரது கடைசி திரைத் தோற்றமும் கூட.




பின்னர் தனது பழைய படங்களுக்கு புத்தம் புதிதாய் இசையைச் சேர்த்து மறுவெளியீடாகக் கொண்டுவந்தார். அப்போதும் அவை பெரும் வெற்றி பெற்றன.

சாப்ளின் மிகச் சிறந்த இசையமைப்பாளர். 'லைம்லைட்' (1952) படத்தின் 'ஒரிஜினல் ஸ்கோரு'க்காக சார்லி சாப்ளினுக்கு ஆஸ்கர் தரப்பட்டது.

இது தவிர 1929 மற்றும் 1972ஆம் ஆண்டுகளில் அவருக்கு கௌரவ ஆஸ்கர் விருது தரப்பட்டது.

ஆனாலும் உள்ளுக்குள் அவரது ஏக்கம், தனது படங்கள் மூலம், தனது நடிப்புக்காக அந்த ஆஸ்கர் கிடைக்கவில்லையே என்று. அதுவே பல தருணங்களில் ஆஸ்கர் குழுவினர் மீதான கிண்டலான விமர்சனமாகவும் அவரிடமிருந்து வெளிப்பட்டுள்ளது.

கம்யூனிஸ்ட் சாப்ளின்

உலகம் முழுக்க பெரும் வரவேற்பைப் பெற்ற 'சிட்டி லைட்ஸ்', 'கிரேட் டிக்டேட்டர்' போன்றவை ஒரு ஆஸ்கர் விருதுக்குக் கூடப் பரிந்துரைக்கப்படவில்லை. காரணம், அவரது அரசியல் நிலைப்பாடுகள் என்கிறது சரித்திரம். இருந்தாலும் பிரிட்டிஷ் அரசு அவருக்கு சேர் பட்டம் வழங்கி கௌரவித்தது.

சாப்ளின் முழுக்க முழுக்க கம்யூனிச சித்தாந்தத்தின் ஆதரவாளர். மேற்கத்திய நாடுகள் அவரை ஒரு கம்யூனிஸ்டாகவே பார்த்தனர். தனது படங்கள் பெரும்பாலானவற்றில் கம்யூனிசக் கருத்துக்களை போகிறபோக்கில் நச்சென்று சொல்லிவிட்டுப் போயிருப்பார் சாப்ளின்.

சொந்த வாழ்க்கையில் அவருக்கு நிறைய சோகங்கள் இருந்தாலும், 1977இல் ஒரு கிறிஸ்துமஸ் தினத்தன்று தனது இறுதி மூச்சு அடங்கும் வரையிலும் மக்களைச் சிரிக்க வைத்து சிந்திக்க வைக்கும் பெரும் முயற்சியைத் தொடர்ந்து கொண்டே இருந்த ஒப்பற்ற கலைஞன் அவர்.

ஒரு கலைஞன் எப்படிப்பட்ட படைப்புகளை மக்களுக்குத் தரவேண்டும் என்று பாடம் எடுத்த ஆசானும் கூட!



## பணம் கொட்டும்...

( 08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேய்களும் ஈர்க்கின்றன. ஆனால் கதை நன்றாக இருக்க வேண்டும். திகிலூட்ட வேண்டும் என்பது அவசியம். ஒழுங்கான கதை இருந்ததால்தான் சின்ன 'பட்ஜெட்'டில் எடுக்கப்பட்ட 'பீஸா'வும், 'டிமாண்டி காலனி'யும் ஓடின. பெரிய 'பட்ஜெட்'டில் எடுக்கப்பட்ட 'அரண்மனை' போன்ற படங்களும் ஓடின என்கிறார்.

'ராத்', 'பூங்', 'பூத்' எனத் திகில் பட வகையில் வரிசையாக பல படங்களை எடுத்து வெற்றிபெற்ற இயக்குனர் ராம்கோபால் வர்மா, பார்வையாளரை நடுங்க வைக்கும் வகையில் திகில் படங்கள் இருக்க வேண்டும். அடுத்து என்ன என்ற பதைபதைப்பிலேயே பார்வையாளர்களை வைத்திருந்தால்தான் பேய்ப் படங்கள் வெற்றிபெறும் என்கிறார்.

பகுத்தறிவு மூலம் நம்மைச் சுற்றி நடப்பதை நம்மால் ஆராய முடிந்தாலும், விந்தையும் பயமும் அடிப்படை உணர்ச்சிகளாக நம்மிடம் இருக்கவே செய்கின்றன. குழந்தைகளும் இளைஞர்களும் பாதுகாப்பான திரையரங்கம் போன்ற சூழல்களில் திகிலடைய விரும்புகிறார்கள். தினசரி வாழ்க்கையில் நடக்காத பயங்கரங்களை நடப்பதாக கற்பனை செய்வதற்கு பேய்ப் படங்கள் உதவியாக இருக்கின்றன. அதனால் பேய்ப் படங்கள் எல்லாக் காலத்திலும் மக்களை ஈர்க்கின்றன என்கிறார் மனநல மருத்துவர் பி.ஆனந்தன்.

கடந்த ஆண்டு வெளியான பேய்ப் படங்களில் பல தோல்வியைத் தழுவியிருந்தாலும் 2015இல் வெளியான பேய்ப் படங்கள் இதுவரை ஏமாற்றவில்லை. இதனால் பேய்களின் மீதான ரசிகர்களின் பயம் தமிழ் சினிமாவுக்கு பணத்தைக் கொட்டித் தரும் மந்திரமாக மாறியிருக்கிறது. ஆனால் இந்தப் போக்கு நீடிக்காது என்கிறார் தமிழ்நாடு திரையரங்க உரிமையாளர்கள் சங்கத் தலைவர்.

எப்படியிருந்தாலும் பேய்களின் கோபமும், அவற்றின் கண்ணீர் கதைகளும், அவற்றின் பழிவாங்கும் படலமும் 'ஹொலிவுட்'டில் இப்போதைக்கு ஓயாது என்பது மட்டும் நிச்சயம்.

## பாலியல் கொலைகளின்...

( 10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டியுள்ளான்.

இன்னும் சில சமயங்களில் பெண்களின் உள்ளாடைகளை களவாக எடுத்துச் செல்வதையும் கொண்டயா பொழுதுபோக்காகக் கொண்டுள்ளான். எனவே அவனையும் இந்த வழக்கில் ஒரு சந்தேக நபராகப் பொலிஸார் சேர்த்துக் கொண்டனர். சில நாள் தேடுதலுக்குப் பின்னர் சிக்கிக் கொண்டான் கொண்டயா. அவனைப் பொலிஸார் தீர விசாரித்ததில் தானே சிறுமியைக் கொன்றதாக கொண்டயா ஒப்புக் கொண்டான்.

வழக்கம் போல இந்தப் பக்கமாக நள்ளிரவில் நடமாடிய போது, இந்த வீட்டில் மட்டும் வெளிச்சம் இருந்தது. சத்தம் போடாமல் வந்து பார்த்தேன். ஒரு அறையில் மூன்று குழந்தைகள் உறங்கிக் கொண்டிருந்தார்கள். அதில் இந்தச் சிறுமியைப் பார்க்க எனக்கு பாலியல் ஆசை வந்துவிட்டது. மெதுவாக கதவைத் திறந்து, சிறுமியை தூக்கிக் கொண்டு சென்று ஏன் பாலியல் இச்சையைத் தீர்த்தேன். பின்னர் துணியால் அவள் கழுத்தை நெரித்து விட்டு, ஆற்றோரமாக கொண்டு சென்று உடலை மறைத்துவைத்தேன் என்று கொண்டயா வாக்குமூலம் கொடுத்துள்ளான்.



ஆயினும் உண்மையாகவே கொண்டயாதான் குற்றவாளியா? அல்லது பொலிஸ் தரப்பு மக்களின் ஆர்ப்பாட்ட அழுத்தங்களில் இருந்து தப்ப ஏதுமறியாத கொண்டயாவை கொலையாளியாக்க முயல்கிறதா என்ற வாதப்பிரதி வாதங்களும் நடைபெற்றே வருகின்றன. இப்படி அப்பாவிகளைப் புலிகள் என்று வடக்கு, கிழக்கு பகுதிகளில் பொலிஸ் கைது செய்த சம்பவங்கள் கடந்த காலங்களில் அரங்கேறியிருக்கின்றன. தென்னிலங்கையிலும் பெரும் புள்ளிகளைத் தப்பவைப்பதற்காக இப்படி ஏழைகள் சிக்கவைக்கப் படுவதுண்டு. அப்படித்தான் கொண்டயாவும் சிக்க வைக்கப் பட்டானா? அல்லது உண்மையாகவே அவன் தான் கொலையாளியா என்பதை இன்னும் சில நாள் காத்திருப்புகள் சொல்லி விடும். என்னதான் தண்டனை கொடுத்தாலும் இறந்துபோன சிறுமி திரும்பி வரப்போவதில்லைதான். ஆயினும் இப்படியானவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனை இனிவரும் காலங்களில் இப்படியான துர்ச்சம்பவங்கள் நடைபெறதிருக்க வழிகோல வேண்டும்.

## பாலியல்...

( 3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கீகரிக்கப்பட்ட பாலியல் துஷ்பிரயோகங்களும் அவர்களுக்குத் தண்டனை இல்லை என்ற நிலைமையும் வளர்ச்சி பெற்று, இன்று சிறுவர் துஷ்பிரயோகம் பாலியல் கொலை என சமூக நோயாக அது மாறிவிட்டது.

எனவே மரண தண்டனை மூலம் மட்டும் இத்தகைய அநாகரிகங்களை நிறுத்தி விட முடியுமா? என்பதும் சந்தேகமே!

அடிப்படையில் படையினர், அரசியல்வாதிகள், மதகுருமார் உட்பட பாலியல் கொடுமைகளில் சம்பந்தப்பட்ட அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். அதே வேளை இப்படியான நபர்கள் சமூகத்தில் அம்பலப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட வேண்டும். அதுவே அவற்றைத் தடுக்கும் ஒரு ஆரம்பப் புள்ளியாக அமைய முடியும்.

## புட்டினின்

( 7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியுறவுத் துறை அமைச்சரைச் சந்தித்த பின்னர் கருத்து வெளியிட்ட அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலர் ஜோன் கெரி, குறுகிய கால அடிப்படையில் பஷார் அல அசாத்தையும் இணைத்துக் கொண்ட ஒரு பேச்சுவார்த்தையைச் செய்யலாம் என்றும், நீண்ட கால அடிப்படையில் அசாத் இல்லாத ஒரு பேச்சு வார்த்தை மட்டுமே நடை பெறும் என்றார். ஆனால் அசாத் தான் பதவி விலகுவது என்பது பேச்சு வார்த்தை மேசையில் முன்வைக்கப்பட முடியாத ஒன்று என்கின்றார்.

ஏற்கனவே மேற்கு நாடுகள் இரகசியமாக ஐ எஸ் அமைப்பினர், அசாத்திற்கு எதிராகப் போர் புரிய உதவுவதாகக் குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இனி அந்த உதவிகள் ரஷ்யாவிற்குப் பிரச்சனை கொடுக்கும் வகையில் மேலும் அதிகரிக்கப் படலாம்.

ஈரானை அமெரிக்காவினதும் மேற்கு ஐரோப்பிய நாடுகளினதும் பொருளாதாரத் தடையை, அவற்றுடன் சேர்ந்து செயற்பட்டு, புட்டின் தந்திரமாக நீக்கிவிட்டார். இப்போது ஈரான் ரஷ்யாவுடன் இணைந்து அசாத்தின் ஆட்சியைப் பாதுகாக்கின்றது. சிரியாவில் அசாத்தின் ஆட்சியும், ஈரானும், லெபனானில் செயற்படும் ஹிஸ்புல்லா ஆகியவை இரசியாவுடன் இணையும் போது மத்திய கிழக்கில் ரஷ்யாவின் ஆதிக்கம் மீள் நிலை நிறுத்தப்படும்.

## மாவீரன் அலெக்ஸாண்டரின்...

( 11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுகம் என்று தேடி, எதைக் கொண்டு போகப்போறோம்..? எங்களில் எத்தனை பேர், நமக்காக, நமது குடும்பத்துக்காக நேரத்தைச் செலவழிக்கிறோம்..?

செய்ய வேலை, இல்லை சொந்த வியாபாரம், இதையே காரணம் காட்டி, அதுக்குள்ளேயே மூழ்கி, என்ன செய்கின்றோம் என்றே தெரியாமல், திடீர் என்று வயது ஆகி... மேலே போகப்போறோம்.. நாம் கடைசிலே கொண்டு போகப்போறதும் ஒன்றும் இல்லை.. இருக்கிறவரைக்கும், நாமும் நமது குடும்பமும் சந்தோசமா இருப்போம். நமக்கு மிஞ்சியதைத், முடியாதவங்களுக்கு, நம்மால் முடிந்தவரை உதவி செய்வோம்...

வாழ்க்கையில் இருந்து நாம் என்ன கற்றோம் எனப் புரிந்து, நல்ல விதமா வாழ்க்கையை மாற்றுவோம்..

சம்பாதிக்கிறதில் ஒரு பகுதியை, முடியாத ஏழைகளுக்கு, முதியவர்களுக்கு கொடுத்து உதவுங்கள். உங்களைப் பெற்றவர்களை நேசியுங்கள்... அவர்களுடைய மனம் வாழ்த்த, வாழ்த்த, உங்களுக்கு நல்ல வாழ்வு நிச்சயம் கிடைக்கும்.

பெற்ற பிள்ளைகள் உயிரோட இருக்கிறப்போது, அநாதையாக முதியோர் இல்லத்தில் சேர்க்கிற கொடுமை இனிமேலாவது ஒழியட்டும்...

முடிந்தவரை, ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம், உங்க உடல் நலத்துக்காகச் செலவழியுங்கள். அது உடற் பயிற்சியாக இருக்கலாம். அல்லது நடை, ஓடுதல், யோகாவாக இருக்கலாம்.. நம்மை நாமே தான் பார்த்துக் கொள்ள வேண்டும்.. உங்கள் குழந்தைகளுக்கும் கற்றுக் கொடுங்கள். ஒரு தலைமுறைக்கே வழி காட்டியா இருக்கும்..!!!

வாழ்க மானுடம்! வாழ்க மனித நேயம்..!

**நன்றி இணையம்**




Whirlpool
HOME APPLIANCES
நேரத்தை சேமிக்கும்
சமையல் புத்தகம் ஒன்று
இலவசம்
MICROWAVE COOKERY BOOK
ரு.11,220
ரு.13,300
ரு.16,500
0714020799
Abans




KFC
IT'S FINGER LICKIN' GOOD!
011 5 532 532




Hero
உங்கள் உள்ளத்தை
கொள்ளை கொள்ளும்
GLAMOUR
SIMPLY MAGNETIC
ரு.224,500/-
For More Mileage
5 WARRANTY
☎: 0777340056
அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள் மற்றும் ஹீரோ விற்பனை முகவர்களிடமும் பெறலாம்.
Abans




இப்பத்திரிகை கொழும்பு - 6. வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2015 செப்டம்பர் 30ஆம் திகதி வெளியிடப்பட்டது.